# நல்லூரான் புகழ்



த.ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



மலர்வு

31 . 08 . 1945

உதிர்வு

14 . 02 . 2022

அமரர்

# மேனகா தனபாலசிங்கம்

அவர்களின் சிவப்பேறு குறித்த

## திதி வெண்பா

மாசி இரண்டில் வளர்பிறை நாள்தன்னில்
கூடும் 'திரயோ தசித்திதியில்' – வாழ்வாங்கு
வாழ்ந்துநல் லூரான் மடிநிழலில் 'மேனகா' த்தாய்
மீளாத் துயில்கொண்டாள் வென்று!

22 MAR 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்

ஒளி விளக்காய்த் திகழ்ந்த

எம் இல்லத்தரசி

அன்னை ***மேனகா தனபாலசிங்கம்***

அவர்களின்

ஈக வாழ்வுக்கு

இம் மலரினைக்

காணிக்கையாக்குகிறோம்.

17.03.2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் வாழ்க்கை அடிச்சுவடுகள்

யாழ்ப்பாணம் நல்லூரை பூர்வீகமாகக் கொண்ட எம் இல்லத்தரசியான மேனகா அவர்கள் தந்தையாரான பாலசிங்கம் தாயாரான மதனாம்பாள் ஆகியோருக்கு சிரேஷ்ட புத்திரியாக 31.08.1945 அன்று மருதானை மகப்பேற்று மருத்துவ மனையில் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் 1955ல் தந்தையார் கடமை நிமித்தம் கொழும்பு சென்றதால் இடைநிலைக் கல்வியை கொழும்பு விவேகானந்தா கல்லூரியிலும் கற்றார். இவர் தனது ஆறாவது வயதில் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டு பின்னர் காலில் சத்திரசிகிச்சை செய்யப் பெற்றிருந்தார். ரஞ்சனா, மனோகரன் ஆகியோர் இவருக்கு சகோதரர்கள் ஆவர். 1958 இனக் கலவரத்தைத் தொடர்ந்து கப்பலில் யாழ் திரும்பியது இவர்களின் குடும்பம். யாழ் திரும்பிய இவர் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். இயல்பாக கலைகளில் நாட்டமும் சித்திரம் வரைவதில் ஆற்றலுள்ளவராகவும் விளங்கினார். இளம் பராயம் களணி ராகம கொழும்பு ஆகிய இடங்களில் கழிந்தமையால் சிங்கள மொழியை எழுதி வாசிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். தையல், பின்னல் வேலை போன்றவற்றில் ஈடுபாட்டுடன் திகழ்ந்தார்.

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் (தனம்) அவர்களை காதலித்து 1971ம் ஆண்டு கடி மணம் புரிந்தார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக 1973 இல் மகன் ஜெயசீலனும் 1975 இல் மகள் கவிதாவும் பிறந்தனர். தன் கணவன் மற்றும் பிள்ளைகள் மீது பரிவும் அன்பும் பாசமும் பொழிந்து வந்தார். 1996இல் இருந்து தனது இறுதிக் காலம் வரை முதுமையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைகளைத் தாண்டி கணவருடன் மனமொத்து இணைபிரியாது வாழ்ந்தார்.

1970களின் இறுதிப் பகுதியில் எமது மண்ணிலிருந்து பொருளாதார மேம்பாடு கருதிப் பலரும் வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் சூழல் உருவாகியது. 1978இல் கணவர் சிங்கப்பூருக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. பிள்ளைகள் இருவரும் சிறியவர்களாக இருந்த போதும் கணவரின் முயற்சிக்கு உறுதுணையாக இருந்து அவரை வழியனுப்பி வைத்தார். கணவர் சிங்கப்பூர், லெபனான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் கடமையாற்றி இடையில் ஓரிரு தடவைகள் தாயகம் வந்து திரும்பிய போதும் மீள 1996ல் தாயகத்தில் நிரந்தரமாக வசிக்கும் வரையிலும் பிள்ளைகள் இருவரினதும் ஆரம்பக் கல்வியிலிருந்து அவர்கள் உயர்கல்வி பெறும்வரை அவர்களின் சகல கல்வி முயற்சிகளுக்கும் உறுதுணையாக விளங்கினார். ஆர்வம் அறிந்து மகனை அவரது 7வயது வயதில் மிருதங்கம் கற்கவைத்தார். மகளை 8வயதில் வயலின் கற்க வைத்தார். பிள்ளைகளின் விருப்பறிந்து அவர்கள் தம் திறமைகளுக்கு ஏற்ப கல்வித்துறையில் தெரிவுகளைச் செய்ய பூரண ஒத்துழைப்பை வழங்கினார்.

1978 இல் இருந்து 1996 ற்கு இடையில் நாட்டில் ஏற்பட்ட 83 இனக் கலவரம், முதலாம் ஈழப்போர், இந்திய இராணுவ வருகையும் போரும், மீண்டும் இரண்டாம் ஈழப்போர், பொருளாதாரத் தடைகள், வலிகாம இடம்பெயர்வு, போன்ற மிகமிக இக்கட்டான சூழ்நிலைகளிலும் தன்னந் தனியாக தனது குடும்பத்தினரையும் பிள்ளைகளையும் மிகுந்த சிரமங்கள், பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும், உடல்நிலை பூரணமாக ஒத்துழைக்காத போதிலும் இறை நம்பிக்கை, ஆத்ம பலம், தற்துணிவு, மாறா அன்பு, மனஉறுதி, என்பவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை கொண்டு தன் சுகங்கள், மகிழ்ச்சி, விருப்பங்கள், ஆசைகளை இரண்டாம் பட்சமாக்கி பிள்ளைகளை ஆற்றுப்படுத்தி பண்பாளர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் கல்வியாளர்களாகவும் சமூக சிந்தனை, தனித்துவ ஆற்றல் மிக்கவர்களாகவும் வளர்த்தெடுத்தார். அன்னாரின் தாயார் நீண்டகாலம் நோய்வாய்ப் பட்டிருந்து 1990இலும், விசேட தேவைக்குட்பட்ட சகோதரன் வலிகாமம் இடம் பெயர்வைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து பளையில் இருந்தபோது 1996இலும், தந்தையார் 2002இலும் இயற்கை யெய்திய போதும் துவண்டு போகாது தன் குடும்பக் கடமைகளைத் தொடர்ந்தார்.

பிள்ளைகளின் திறமைகளையும் சாதனைகளையும் கண்டு கேட்டு மகிழ்ந்து அவர்கள் இருவரையும் பல்கலைக்கழகப் பட்டதாரி களாகவும் ஆக்கி உவகையுற்றார். மகனின் திருமணத்தை 2006இலும் மகளின் திருமணத்தை 2009இலும் கண்டு அவர் தம் மருமக்களான லங்கினி, குமாரதாஸன் ஆகியோர் மீதும் அவர் களின் குழந்தைகளான ஆருத்ரா, அட்சரா, அவ்வை, அம்பை ஆகியோர் மீதும் பெரும் அன்பைக் கொண்டிருந்தார். மகள் 2011இல் லண்டன் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. மகனின் பிள்ளை களுடன் நேரடியாகவும் மகளின் பிள்ளைகளுடன் Skype, Whatapp வழியாகவும் அளவளாவி மகிழ்வார். மகனின் இரு புதல்விகளும் பூப்பெய்திய மங்கல நிகழ்வுகளிலும் கலந்து அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தார்.

அமரர் மேனகா அவர்கள் அன்பே உருவானவர். மிகவும் எளிமையானவர். எவரையும் மனம் நோகச்செய்யவோ பேசவோ தெரியாதவர். உறவுகளுடன் அன்னியோன்யமாக பழகும் இயல்பு உடையவர். “மற்றவர்களுக்கு ஏன் சிரமம்” “யாருக்கும் கரைச்சல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைஞ்சல் கொடுக்கக் கூடாது" என அடிக்கடி சொல்லும் இவர், பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட யுத்த காலத்திலும் பின்னும் சிக்கனமாகவும் சேமிப்பை மேற்கொண்டும் செம்மையாகவும் தனது கஷ்டங்கள் கவலைகளை வெளிக்காட்டாமலும் வாழ்ந்தார். சுமார் இருபது ஆண்டுகள் வாடகை வீடுகளில் குடியிருந்த போதிலும் பின்னர் தனது இறுதி மூன்றரை வருடங்களுக்கு மேலாக அவரினதும் கணவரினதும் நீண்டகாலக் கனவான சொந்த வீட்டில் குடி புகுந்து அதன் அரசியாக திகழ்ந்து மகிழ்ந்தார்.

நோய் நொடி என்று வைத்தியசாலைப் படியேறிச் சென்று வந்தவரோ, நோய் நொடியைக் கண்டு நொடிந்து கிடந்தவரோ அல்ல இவர். என்ன வருத்தம் துன்பம் எனினும் ஓரிரு நாட்களில் மீள எழும்பி தன் வழமையான பணிகளை ஆற்றுவார். கொரோனா துயரங்களையும் ஊசி பெற்று கடந்து கழித்தார்.

இவ்வருடப் பொங்கல் தினந்தன்று கூட மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொங்கி வீட்டுக்கு வந்த பேர்த்திகளுடன் உண்டு மகிழ்ந் தார். அடுத்து வந்த சில நாட்களில் உடல் நலக்குறைவு ஏற்பட்டு 20.01.2022அன்று குருதிப் பருசோதனை மேற்கொள்ளப்பட் டதைத் தொடர்ந்து மருத்துவரின் ஆலோசனையால் 21.02.2022 அன்று யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு இரு தினங்கள் 3ம் வாட்டில் இருந்த போதும் அனைவருடனும் அவர் களின் நலன்களை பற்றி அளவளாவினார். எனினும் அடுத்து வந்த தினங்களில் உடல் நிலையில் பாதிப்பு அதிகரித்து நினைவிழந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். வெளிநாட்டிலிருந்து மகள் வந்து பார்த்ததைத் தொடர்ந்து சில தினங்களில் அவரில் சிறிது முன்னேற்றம் காணப்பட்ட போதும் மீண்டும் அவரது வயதும் உடல் நிலையும் ஒத்துழையாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் 23 தினங்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றார். மருத்துவர்கள் தொடர்ச்சியாக மிகுந்த பிரயத்தனம் செய்து அவரை மீட்கப் போராடினார்கள். அவரும் போராடினார். எனினும் அவரின் உள்ளிருந்து உறுத்திய நோய் அவரைப் பழைய நிலைக்குத் திரும்பத் தடுத்தது. இந்த இருபத்தைந்து நாட்கள் தான் அவருடைய வாழ்வில் அவர் தன் குடும்பத்தாரை பிரிந்து, வீட்டை பிரிந்து தனித்து இருந்தது.

இல்லற வாழ்வில் இவ்வருடம் 50 வருடங்களை பூர்த்தி செய்த அன்னை அவர்கள் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர் கலங்க 14.02.2022 மாலை 6.15 அளவில் நல்லூரானின் நற்கருணை நிழலில் மீளாத் துயில் கொண்டார்.

சீராகவும் எளிமையாகவும் செம்மையாகவும் தான் தன் காலில் நிற்கவேண்டும் என்ற வைராக்கியத்தோடும் முயன்று தனது குடும்பத்தையும் வாழ வைத்து, பிள்ளைகளின் உயர்வைக் கண்டு மகிழ்ந்து, யாருக்கும் தீங்கு எண்ணாது, யார்க்கும் பாரமாக வும் இருக்க நினைக்காது இறுதிவரை தனைச் சார்ந்தவர்களுக்காக பொருளையும் புண்ணியத்தையும் சிறுகச் சிறுக சேமித்து எல்லோருடனும் உண்மையாக அன்பு வைத்துப் பூரணமான ஒரு வாழ்வை வாழ்ந்து ஒளிர்ந்து, இறைவனடி சேர்ந்த அன்னையின் வாழ்க்கை அடிச்சுவடுகள் எம் நினைவை விட்டு என்றென்றும் நீங்காதவை. அன்னாரின் ஆன்மா மீண்டும் பிறப்பில்லா பேரின்ப பெருவாழ்வு காண எல்லாம் வல்ல நல்லூரானை வேண்டி அவன் கழல் பணிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.02.2022 அன்று
நல்லூரானின் நற்கருணை நிழலில்
மீளாத் துயில் கொண்ட
எமது இல்லத்தரசி
அன்னை **மேனகா தனபாலசிங்கம்**

நினைவாக

# நல்லூரான் புகழ்

***த. ஜெயசீலன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி மூலம்

உலகினை நம்பிடேன் ஊரினை நம்பிடேன்
உறவையும் நம்ப மாட்டேன்
உயிர்தந்த 'தேவர்கள்! உடன்வந்த சோதரர்
உரிமையை நம்ப மாட்டேன்.
கலக்கின்ற காதலைச் சீதனக் காணியைக்
'கலை' யாடிப் பெற்ற மகவை
கனவினை, கல்வியை, கவிதை யயும் அல்ல
எனையும், நான் நம்ப மாட்டேன்.
நிலையான நிசமாக நினைமட்டுந் தானடா
நிதம் நம்பிச் சுவாசிக்கிறேன்
நின்பாதம் சரணென்று நீ நல்கு அரணென்றுன்
நிழலுக்குள் இடந்தேடுறேன்.

எனைமீறித் துயரங்கள் எரிமூட் வரும்போது
அதை நூர்க்கும் வழி தெரிகிலேன்.
இருள்கின்ற முகத்தோடு இதயத்தில் இடியோடு
உறங்காதக் கணம் அழுகிறேன்.
பனி மூடும் மலையாக எனைச்சூழும் சுமையாவும்
விலகாதா எனவும் அலைவேன்.
பதற்றத்தில் உன்மீதும் பழிபோட்டு, மனமொன்றிக்
கடன் செய்திடாதும் தளர்வேன்.
வினையாவும் நொடிப்போதில் விழ... வந்து என் கண்முன்
வியப்பான விடை நல்குவாய்
விசரன்போல்... உனைவாழ்த்தி விதி நீயென்றுருவாடி
விதிர்ப்பேன், நீ ஜெயம் நாட்டுவாய்.

துயரங்கள் உனைமேலும் உறுதியாய் நம்பிடத்
துணை செய்யும் வழிகாட்டிகள்
சோகங்கள் நீ எங்கும் சுடர்கிறாய் என்பதைப்
பறை சாற்றுந் தொலைக் காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலென்ன புயலென்ன அகிலமும், அறிவும் உன்
அடையாள அணிவகுப்புகள்
அனைத்தும் உன் செயலென்று அறிந்துமேன் சிலநேரம்
அலைபாயும் எனது ‘எளிய உள்’?
உயிர்க்கூட்டுள் உறவாடி உணர்வுக்குள் கொடியேற்றி
உறைகின்ற எந்தன் தலைவா!
‘உடைகின்ற’ நேரத்தில் உதிராமல் உனை எண்ண
உதவிசெய் நல்லை முருகா.!

- 2000 -

## நல்லூர்

வானம் குனிந்து வணங்க... முகில் திரண்டு
பூச்சூட்ட, கோடிப்
புனிதம் குவிந்ததெனக்
கோபுரம் நிமிர்ந்துளது!
குரல்வைக்கும் நாதமணி
நாலு திசைகளையும் துயிலெழுப்ப வீற்றிருக்கு!
வர்ணம் கலந்து வடிவொழுகும் ‘யாளித்தூண்’,
சிற்பச் சிறப்பில்
திமிர்ந்து நிற்கும் மண்டபங்கள்,
ஊற்று அருள்விளக்கு,
உயிர் கரைக்கும் தீபங்கள்,
மோட்சத்தைக் காட்டுகிற மூலஸ்த்தானம், மேளம்
தாளம் அதிரச் சாந்திதரும்
பூசை கால
மந்திரங்கள்,
மனசை வருடுகிற மலர்வாசம்,
சந்தனம் அகிற் புகைகள்,
தளர்ந்து மனமொடுங்கின்...
கண்ணுள் ஒளிபரப்புங் கற்சிலைகள், அமர்ந்திருந்தால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரத்தில் மிதக்கவைக்கும் கேணியடி,
சுற்றிவர
ஞானம் பரப்பும் மணல்வீதி... இவையனைத்தும்
மோன மொழிபேசி
முக்திதரக் காத்திருக்கு!
திருவிழா நாளென்றால்...
பலமடங்கு புனிதமிந்தத்
தெருவை நனைக்கும் தெய்வீகம் கரைபுரண்டித்
திசையைப் புதுப்பிக்கும்
'தினம்' தோறும் நமைத்திருத்த
நசியாதெம் விழுமியத்தை நல்லூர் மணிகாக்கும்!

நல்லூரே உன்னிடத்தில் நான்சிலதைக் கேட்கின்றேன்
சொல்லுன் இரகசியத்தை!
சுவர்க்கமென எப்படிநீ
என்றும் இளமையுடன் இனிமைதந் திருக்கின்றாய்?
சந்திக்கோர் கோவில் இருப்பினும் உன்
தாளடியில்
எங்குமிலா ஓர்சிறப்பை எப்படிநீ வளர்க்கின்றாய்?
என்றென்றும் ஞான இசையில்
மனங்களினைப்
பண்படுத்திப்,
பக்குவப் படுத்தி, இறை இன்ப
அன்பைப் பரம்பரையாய் எவ்வாறு ஊட்டுகிறாய்?
உன்தெருவின் காற்றுமட்டும்
உயிர்சிலிர்க்க வைக்கிறதே!
உன்நிழல் தான் துன்பத்தை துரத்திவரும் போர், பிணியைச்
சங்கரித்துப், பயநெஞ்சில்
சாந்திதந்து மீட்கிறதே!
உன்சூழல் அறியவொண்ணாச் சுகந்தம் பரப்பிடுதே!
விஞ்ஞானம் அறியா விடையொன்றுன் கருவறையில்
எஞ்ஞான்றும் இருந்திவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத மண்ணைக் குளிர்த்திடுதே!
எவ்வாறெனக் கேட்டு விழுந்தெழும்ப...
பரவசத்தில்
மெல்லிய உணர்வொன்றென் மேனியெங்கும் பரவியது!
உள்ளே ஒரு உதயம் உருவாச்சு!
அன்பர்களே...
நல்லூர் ஒருநாளென் கேள்விகட்குப் பதிலளிக்கும்
அன்றுவரை எனைஅருகில் இருக்கவிட்டால்
அதுபோதும்.!

- 2000 -

## To stand and wait

The frontal tower stands erect
As in embodiment of sanctified infinity
With the ethereal canopy bowing down
And the clouds floral crowning the pinnacle.
The resounding bell is there
To awaken the environs at dawn;
Colourful 'yali' 'pillars' structurally splendid,
Halls standing up in majestic arrogance,
Lamp-lit brilliance of grace,
Flames that melt one's soul
The 'sanctum sanctorum' a metaphor for liberation,
The chanting of 'manthrams', the rhythmic cadences,
Fragrance of flowers that sooths
And anoints the mental injuries,
Incense from 'sandal' and 'ahil' vapours
Stone statues illuminating you
From within-
If your thoughts relaxed and got focussed,
The holy water tank that propels you
Into outer space, while you sit aside,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And the sand- spread ground, around-
All these await you eveready
To speak nonverbally and point towards
Liberation.

If it's a festival day...
The sanctity gets multiplied manifold
Divinity rejuvenates the vicinity
The temple bell from Nallur
Will save our values from extinction.
Oh Nallur,
Please listen to my questions,
Reveal your secrets
How do you manage to be evergreen
Just as paradise itself?
Many, there are shrines
In nooks and corners
How is it that you nurse
An excellence
Unique and unparralled
How do you process minds
And sublimate them
And from generation to generation
Continue perpetuation
Of spiritual well being?
Why is it that only the winds
That blow in your neighborhood
Send through me
A thrill down the spine?
Why is it that your shadow alone
Is capable of curing
Our worries, wars, ailments



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Leading us to
Peace and freedom from fear?
Why is it that your territory alone
Spreads an indescribable fragrance?
While a perfect solution beyond sciences
Sits in the Holy of Holies of your shrine
Cooling down this globe?
When I ask thus, prostrate
And get up,
A rare feeling, a tender impulse
Sprouts from within
Spreading all over the limbs
A new dawn-a resurrection

Dear ones,
Nallur, some day will answer
My queries.
I shall thank you to allow me
To stand and wait-till then.

Tamil original - T.Jeyaseelan
Translated by : Kavignar R.Murugaiyan

(இக்கவிதை 2000ம் ஆண்டு அரியாலை வரை போர் நகர்ந்திருந்த போது நல்லூர் அயலிலும் பலர் இடம் பெயர்ந்திருந்த வேளையில் எழுதப் பட்டது. என் முதல் கவிதைத் தொகுப்பான 'கனவுகளின் எல்லையில்' இடம் பெற்றது. கவிஞர் முருகையன் அவர்கள் 2004இல் இதனை மொழிபெயர்த்திருந்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நல்லூரான்

அன்பன் எனத்தொடர்ந்தால் அருளி, அணுக்கமான
தொண்டனாக்கி,
நெஞ்சால் நினைந்தணைக்கும் தோழனாக்கி,
என்றும் தனதுயிர் நிழலில்
களைப்பாறப்
பண்ணும் எழில்முருகன்!
பண்டைப் பெரும் நல்லை
மண்ணமர்ந்து உலகைக் காக்கும் கலி வரதன்!
வந்த தடைவென்று;
நின்ற பகைதின்று;
ஞானசக்தி யாய்வாழும் பன்னிருகையன் வேலன்!
தேவர்கள் ஞானியரும்
தேறவொண்ணா விஸ்வருபன்!
சித்தர்கள் தங்கள் சிந்தைக்குள் அடைவைத்துப்
பித்து மொழியாலே பூசிக்க மகிழுபவன்!
நெஞ்சில் கலக்க எரிமலை குமுறுகையில்;
கண்ணூடு கவலைக் காங்கை முளாசுகையில்;
“அஞ்சற்க” என்று... அபய
மழைபொழிந்து தேற்றுபவன்!
பேதங்கள் பாராப் பெரியோன்;
பணிந்து நம்பும்
யாவரையும் காப்போன்!
நிம்மதி வரந்தருவோன்!
என்ன பெருஞ்செல்வம் ஈந்தாலும்... ஏற்காது
அன்பென்னுஞ் செல்லாக் காசுக்கும் விலைபோவோன்!
ஆடம் பரமும் அழகும் செழித்திருந்தும்
தேடி எளிமைநெஞ்சைத் தேராக்கி ஊர்திரிவோன்!
மின்னும் நகைபுனைந்து
மன்னவனாய்ப் பவனிவந்தும்
துன்பச்சே றுழல்வோரைத் தூக்கி நிறுத்திடுவோன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கருவியாக்கித்
தான் சுருதியாகி நிற்போன்!
என்கவிக்குள் நானழைத்தால்
நர்த்திக்கும் முருகையன்!
என்னால் கவியாக்கித் தான்பொருளாய் வாழுபவன்!
அறியாமை ஆசையால் ஏங்கி
நான் பலகேட்க
எனக்கேற்ப உறவு, பொருள், பதவி, புகழ் தனைத்தந்து
என்றுமென் காலிடறி வீழாமல்
தூயதிசை
செல்லவழி காட்டுபவன்!
நம்விதித் தலையெழுத்தை
நல்வேலால் நாளும் திருத்தி எழுதுபவன்!
இன்பமும் துன்பமும் வெற்றிகளும் தோல்விகளும்
நன்மையும் தீமையும் ஞானமும் பேதமையும்
தானாகி நிற்போன்
சகலதற்கும் காரணன் 'நம்...
நல்லூரான்'! எனக்கு எல்லாமும் ஆன... அவன்
சொல்கின்றான் "பொல்லாப்பு இல்லையென"
நடந்திடுவோம்!

- 2000 -

22 MAR 2022

## வருசத்தில் ஒரு வசந்தம்

நல்லூர் கொடியேறின் நாடொளிரும்.
தீர்த்தமாடி
எல்லா முகமும் எழில் சாத்தும்.
காஞ்சிபுரம்
மாறுகரை வேட்டியுடன்
நகைநட்டும் படையெடுக்கும்.
கோவிலடி மின்னிக் கொலுவிருக்க
பெயின்ற் பூசி
வாகனங்கள் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் வரவே 'ரெடி' ஆகும்.
தங்கரதம், கைலாச வாகனம், தேர், சப்பறமும்
இங்குயிர்க்கப் பக்தர்
எங்கிருந்தோ வந்தணைவார்.
நாலைந்து பேர் திரிந்த வீதி 'நரர் நதியாகி'
நீளும்.
கர்ப்பூர மணம் நிலைக்கும்.
ஐயர்மார்
பட்டுச் சால்வையுடன் பளபளப்பார்.
தவிலருவி
கொட்ட,
'மல்லாரி ' 'சங்கதிகள்' குழைத்தூற்றும்
'பத்மநாதன்' நாதஸ்வரம்
'பவனியினை' வரவேற்க,
'கொம்புகாவும்' முன்னே
குரல்வைக்கும் 'தருமண்ணை'
'அப்பையாம்மான்' 'பொடியள்'
அனைவரிலும் உசார் பூக்க,
நித்திய விரதகாரர்
நேர்ந்துருண்டு நெஞ்சிழப்பார்!
அன்னதான மடங்கள் அவிசொரியும்.
அயலெங்கும்
'கந்த புராணம்' கேட்கும்.
'கச்சேரி' களை கட்டும்.
பந்தல்கள் கடைகள் பசிதணிக்கும்.
காவடியின்
சிந்து நடை கேட்டுத் திசை ஆடும்.
துணை பிடித்து
வேல், வெளிவீதி சுற்றி
விதவிதமாய் 'இருபத்தைந்து
நாள்' சிரிக்கக் காதல் நலமோங்கும்.
இது வழமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தோசம் எங்களுக்கு ஓர் பெரிய
நிம்மதியாம் !
துயர் வெயிலுள் ஒதுங்கவரும் நிழல் மடியாம்!
சம்மதியோம்
இதற்குத் தடை வர நாம் சம்மதியோம்!
இம்முறையும்.
நீண்ட 'நிம்மதிக்காய்' நேர்கின்றோம்!

("1995 இல் வலிகாமம் இடம்பெயர்வில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த 1996 இல் நடைபெறவிருந்த நல்லூர் திருவிழாவிற்காக 19.08.1996 அன்று நான் எழுதிய கவிதை 'அருணன்' என்ற புனை பெயரில் 'நல்லூர் வருடாந்த மகோற்சவம் நேற்று ஆரம்பமானது' என்ற அடிக்குறிப்போடு 'உதயனின்' வார வெளியீடான 'சஞ்சீவியில்' வெளிவந்தது.)

# கந்தனும் காதலும்

நீ சிரிக்கும் போதிலொளி நிலவெறிக்குது - உந்தன்
நினைவெரித்து எந்தனுடல் நீறிவேகுது
கோலஎழில் பார்த்து உயிர் பேதலிக்குது - உன்னைக்
கூடி விளையாட நெஞ்சு தான் துடிக்குது

ஆடம்பரம் அற்று வந்தும் ஆட்டிவைக்கிறாய் - கண்ணின்
அற்புதத்தினால் மயக்கி அன்பு மூட்டுறாய்
மேடைபோட்டு என்நரம்பில் வீணை மீட்டுறாய் - எந்தன்
மேனி எழில்... சோரவைத்து நீ ஜெயிக்கிறாய்

கிட்ட வந்து, கட்டி, முத்தம் வைக்க ஏங்கினேன் - இன்பக்
கேணியெனும் உன்னில் மூழ்க நான் தவிக்கிறேன்
தொட்டணைக்க எண்ணிமூச்சைத் தூதனுப்பினேன் - உந்தன்
தோள்கிடைக்கும்; என்று நூறு பதிகம் பாடினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி கற்பனைகளுக்குள் கொஞ்சம் உண்மையே - கையில்
கூடும்... புவி வாழ்வை வெல்லச் சோடிதேடியே
நாடி... வழிபார்த்து நானும் காதலிக்கவே - உன்னை
நாடி பிடித்தே... மணக்க, வீழ்ந்தேன் தாளிலே!

25.08.1995

## பொன்னுருக்க வாராய்

தாலிகட்டிப் பவனிவரும் தங்கமயில் வேலா - உந்தன்
தாளடியில் கொண்ட காதல் சாய்ந்துவிடும் தானா?

கன்னிகா தானஞ் செய்துன்கையில் கொடுத்தார்கள் - வள்ளி
கள்ளி, தெய்வ யானையையுன் கண்ணுள் பதித்தார்கள்
பால் பழமும் தீத்தியே ஆலாத்தி எடுத்தார்கள் - தலைப்
பாகையுடன் புன்னகைத்தாய் மையலுற்றோம் நாங்கள்!

ஊஞ்சலிலே ஆடுகிறாய் ஊடல் புரிகின்றாய் - பின்னர்
உன் துணைகளோடு பேசி உள்ளங் குளிர்கின்றாய்
பூங்காவன நாளிற் புதுத் தெம்பில் மிதக்கின்றாய் - நாமும்
பூப்படைந்து காத்திருக்கோம். பொன்னுருக்க வாராய்!

தேவியரை மட்டுங் கொஞ்சி எம்மைவிடல் நன்றோ? - உந்தன்
தெய்வ முத்தம் எம்மிதழைத் தீண்டுந்தினம் என்றோ?
கூவி அழைக்கின்ற குரல் கேட்கவில்லை இன்றோ? - வாழ்வில்
குத்து விளக்கேற்றி எம்மைக் கூடு; துயர் உண்டோ?

26.08.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவடிச் சிந்தில் காண்கிறோம்

காவடிகள் தூக்கி இரு கால் நடனம் ஆடிவர
பாவமெலாம் பாறி அறம் காய்த்திடுமே - நல்லூர்
பார்த்திடிலே பரமபதம் வாய்த்திடுமே
பக்திசெய்யச் சித்திவரும் சத்தியத்தின் சக்திமிகும்
முத்தி வரும் மோட்சமெமைத் தொட்டிடுமே - எங்கள்
மூச்சினிலும் நிம்மதிதான் மெட்டிடுமே.

(நல்லை நகர்)

நல்லைநகர் நாதா! நாயகனே நீ வா!

ஆடி அமா வாசை வந்து
ஆறாம் நாளில்..., தான் எழுந்து
கூடி... கொடியேற்றி அருள் நீ சொரிவாய் - நல்லைக்
கோபுரத்தில் காட்சிதந்து நீ சிரிப்பாய்.
கோடி ராகம், சங்கதிகள்
கோர்க்கும் நாத தவில் மழைக்குள்
தேடியெங்கள் தேசமெங்கும் தேன்தெளிப்பாய் - எம்மைத்
தேவராக்கிக் காதலித்துக் கண்ணடிப்பாய்.

(நல்லை நகர்)

தங்கமயில், வெள்ளிக்கிடாய்
தாவும் அஸ்வம், அன்னம், யானை
சிங்கமதில் உந்தன் தேகம் மின்னல் தரும் - தங்கச்
சீர்வரிசை கண்டு எங்கள் கண்கள் படும்
மஞ்சம் எழிற் சப்பறத்தில்
வேல்விமானம், தேர் இரதத்தில்
வந்திடுவாய் மண்ணில் வண்ணக் கோலமெழும் - வீட்டு
வாசலெலாம் புல்லரித்துப் பூத்தொளிரும்.

(நல்லை நகர்)

தீர்த்தமாடிப் பட்டுச்சூடி
தென்றலாகக் கையசைப்பாய்
தேகமெலாம் மெய்யுருகி நின்றிடுவோம் - நீ
தீத்துமருள் தின்று இன்பம் கண்டிடுவோம்
பச்சை சாத்தி, வெள்ளை சாத்தி
பவனிவரும் உன்னைச் சுற்றி
பறவை, தூக்குக் காவடிகள் ஆடிடுவோம் - நூறு
பாற்குடங்கள் காவி உன்னைக் கூடிடுவோம்.

26.08.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலடு நீக்கி மகிழவை

(தொகையறா)

நல்லையூர் துறந்து நாங்கள் நாதி கெட்டுளோம் - உந்தன்
ஞானவீட்டைப் பூட்டி; நாங்கள் ரோட்டில் வாடுறோம்
எல்லையற்ற நின்னைச்சுற்றி நேற்று வாழ்ந்ததை - எண்ணி
இன்றதிர்ந்தும் மீண்டும் உன்னைக் காண ஏங்குறோம்.

தங்கரதம் சப்பறத்தில் வந்த தங்கமே - பச்சை
சாத்தித் தேரிறங்கித் தமிழ் காக்கும் சங்கமே
எங்களை மறந்தனையோ? இன்னும் மௌனமோ - எம்மை
ஏங்கவிட்டு அங்கு நீயும் தூங்கல் ஞாயமோ?

சனமிடித்து நிற்கும் வாசல் வெறிச்சதேனடா? - அர்த்த
சாம, சாயரட்சை மணி துருப்பிடிக்குதா?
கணமும் நூர்ந்திடா விளக்கு எரிந்து போனதா? - நித்தம்
கலகலக்கும் வீதியின்கண் வறண்டு போச்சொடா?

தேரிழுத்து வீழ்ந்துருளும் காலம் காய்க்குமோ? - நல்லூர்
தீர்த்தக் கேணி மூழ்க எங்கள் உடம்பிருக்குமோ?
காலை... மஞ்சம் தள்ளி; பள்ளிப் பூசை காண்பமோ? - உந்தன்
கால்பதிந்த மண்ணைக் கையால் தொட்டுப் பார்ப்பமோ?

அலங்கரித்த வேலினெழில் அடங்கலாகுமா? - நல்லை
ஆலயமும் ஊமையாகின் நாமுயிர்ப்பமா?
மலர்கள் வைக்க மனிசரின்றி நீ சிரிப்பியா? - தமிழ்
மலடுநீங்கி; மலர்ந்து மீண்டும் மகிழ்வையடா!

(வலிகாம இடம்பெயர்வில் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் பளையில் இருந்து பாடியது)

27.01.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி வந்து சிரி

தேரேறி அட்ட திசைகளெல்லாம் பூப்பூக்க
வா தமிழே! எங்கள் வசந்தத்தின் காவலனே!
நூறாயிரம் பக்தர் நோன்பிருந்து வரவேற்க
ஆறுமுகச் சொலிப்பில் அருள்பொழியும் மெய்ப்பொருளே!
பாரோடு விண்ணாய்ப் பரந்தாலும் நல்லூரில்
வேர்கொண்டு எங்கள் வினையறுக்கும் கந்தையா!
பாராமுகம் விட்டு... பசிவிரதம் பிடிக்கும் இந்தப்
பாவிகளைத் தொட்டுப் பதம்காட்டி வாழ்த்தாயா?

தேவர்களாய் நாமும் சிறைப்பட்டம்! பொருளிழந்தம்!
காவியுயிர் சுமந்தம்! கறைப்பட்டம்! இன்றுன்னை
மேவி ஒரு மார்க்கம் வேறில்லை எனத்தெளிந்து
ஆவிதனை உருக்கி ஐயா நின் தாள் பணிந்தம்!
தேவிகளைப் பற்றி, தேரேறி, வேல் சுழற்றி
நீவர... நாம் உந்தன் வடம்தொட்டிழுக்க நின்றம்!
சேனாதி பதியே...! உன் சேய்களெமையும் மீட்டு
சாப விமோசனத்தைத் தர இன்னும் ஏன் சுணக்கம்?

பன்னீரில் குளித்தாய்! பனிநிகர்த்தாய்! நாம் அழுத
கண்ணீரில் கரைந்தாய்! காயமுற்று நாம் சொரிந்த
செந்நீரில் திளைத்தாய்... திருவிழாவில் 'பத்மநாதன்'
சிந்தும் குழல்மழையில் நனைந்தீரம் சுவறி உள்ளாய்!
உண்மையிலே உனக்குத்தான் 'சுரம்' வரணும்! ஆனால் எம்
மண்ணில் 'சுரம்' மலிந்த மருமத்தைப் பார்த்தாயா!
இன்னும் மருந்தின்றி எத்தனைநாள் நீளுமடா?
புன்னகைத்துத் தேரேறி புதிரவிழ்த்து வாழ்த்திடா!

24.08.1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் நாயகன் நாமாவளி

'நாலரைக்கு' நீயெழும்ப நாடு பூத்திடும் - நல்லூர்
நாதமணி கேட்க ஊரில் ஞானமோங்கிடும்
காலை உன்னைக் கருவறையில் காண வாழ்வெழும் - உந்தன்
கண்சொரியும் அன்பு எங்கள் கவலை தீர்த்திடும் 1

ஈழ நிலம் காக்க மண்ணில் நீ இருக்கிறாய் - எங்கள்
இருதயத்தின் ஓசையுள்ளே நீ உறைகிறாய்
காலன் சுட வந்திடில் நீ கண்சிமிட்டுறாய் - அவன்
கயிறெறிவான்; மயிலிறகுள் எம்மைக் காக்கிறாய் 2

மண்ணுக்கொரு மாண்பு உண்டு தம்பி; கேளடா - நல்லூர்
மடியில் அருளூற்று உண்டு வந்தருந்தடா
புண்ணியங்கள் கோடிசெய்த போதும் என்னடா? - நல்லைப்
பொன் மணலில் கால்படாட்டி மோட்சம் எங்கெடா? 3

வீதியுள்ள வேப்பமர நிழலில் நிற்கிறேன் - யோகர்
வீற்றிருந்த தேரடியில் வீழ்ந்துருள்கிறேன்
நீதி சொல்லி நீயணைப்பாய் என்று நம்புறேன் - நெஞ்சுள்
நீயிருக்க என்னபயம்? மோதி வெல்லுவேன்! 4

1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பனுக்கு அன்பன்

உந்தனுக்கு ஒரு விளக்கும் ஏற்ற வில்லை
ஒரு கற்பூரம் கூடக் கொளுத்த வில்லை
உண்டியலில் ஒரு ரூபா கூட நானாய்
உள் நினைத்துப் போடவில்லை! அர்ச்சனைகள்
என்றென்றும் செய்வதில்லை! பிரதட்டைகள்
காவடிகள் என எதுவும் எடுக்க வில்லை!
பொன் பொருளும் தருவதில்லை அபிசேகங்கள்
செய்யவில்லை! புனிதங்கள் பேண வில்லை!
கந்தசட்டி, உபவாசம், விரதம் என்று
கசிந்து; மனம் ஒடுங்கி என்றும் இருக்க வில்லை!
மந்திரங்கள் தேவாரம் பஜனை யோடு
மணிக்கணக்காய் உனைநினைத்தும் சிலிர்த்த தில்லை!
உன் மயிலைக் காவுவதும் இல்லை! உந்தன்
கோவிலிலே தொண்டெதும் நான் செய்த தில்லை!
எந்தனுக்கா அருள் பொழிந்தாய்? நல்லூர் நாதா
எனைத் தந்தேன்; என்னிடம் வேறெதுவும் இல்லை!

15.11.1999

## கந்தா உன் காலே கதி

நெஞ்சிலே சோகமும் நினைவிலே பாரமும்
நீள்கின்ற சோதனைக் காலம்
நித்திரை என்பதும் நிம்மதி என்பதும்
நிர்மூலம் ஆகின்ற நேரம்
பஞ்சிலே தீயெனப் பற்றியிவ் வாழ்க்கைப்
பரப்பை விதிசுடும் போதும்
பாசமாய் எந்தனைப் பார்க்குமுன் அன்புக்குப்
பாவி நான் என்செய்யக் கூடும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகள் கோடியாய் ஆடிடும் ஆயினும்
அருளுவாய்... ஏற்றதைத் தந்து
ஆகாத திக்கில்நான் மோகித்து நீந்தையில்
ஆற்றுப் படுத்துவாய் வந்து
பாதையை இது என்று காட்டுறாய்! பயணத்தைப்
பாய்ச்சலாய் மாற்றுவாய் இன்று
பசியைத் தணிக்கிறாய்... பரிசும் வழங்குவாய்
பயணிக்கிறேன் துன்பம் வென்று!

என் அசைவென்பது உன்சக்தியால்... இதை
எப்பவோ நான் கண்டு கொண்டேன்
எளியனாய்க் கடையனாய்த் தாழ்ந்த எனக்குமா
இன்பங்கள் தந்தாய் வியந்தேன்
உன்கருணை எண்ணின் மனம் வாக்கு காயமும்
உருகக் கனிந்து நான் நின்றேன்
உன்நினைவோடு உன் கையில் நானென்னையே
ஒப்படைத்தேன்! இனி வெல்வேன்! 31.05.2000

## நம்பிக்கை நதிமூலம்

எனக்கும் உந்தன் இதயம் தன்னில் இடம் ஒதுக்கியே - வைத்த
எழிலின் எல்லையான நல்லை வாழும் நாதனே
எனக்குன் பாதக் குளிர்நிழல்தான் நித்தம் வேணுமே - எந்தன்
எழு பிறப்பும் நல்லை ஊரில் தோன்ற வேண்டுமே!

அலைகள் பொங்கும் காட்டு வெள்ளமாக மீறினேன் - நேற்று
அணைகள் இட்டாய்; அமைதியோடும் ஆறு ஆகினேன்
முளைக்கவிட்டாய் ஒளித்திசையில்... முடிகள் சூடினேன் - என்னை
முறைக்கு முறை புடங்கள் இட்டாய்; முழுமை கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையனான எனக்கும் வந்து கருணை காட்டினாய் - எந்தக்
கருத்துமற்ற என் புலம்பல் கவிதை ஆக்கினாய்
கடும் பிழைகள் செய்யவைத்தும் கவலையூட்டுவாய் - ஆனால்
கருகவைத்திடாது வாழ்வின் கருவைச் சொல்கிறாய்!

உந்தன் வாசல் வந்து உள்ளம் உருக நிற்கிறேன் - எந்தன்
உயிர்கரைய அழுதுன் அன்பை மட்டும் கேட்கிறேன்
"உந்தன் வேலை யாவும்" கண்டேன், யாவும் நன்மைக்கே - செய்வாய்
உணர வைத்தாய்! உன்னை நம்பினேன்; நடக்கிறேன்!.

29.07.2001

## சதியறுத்து கதிகொடு

எனது மனம் தனையுமுந்தன் மயிலாக்கி
இருந்துகொண்டு எனையுணர்த்து; பணிகின்றேன்.
கனவில் என்றும் வருபவனே... நனவில் நீ
கவின் மினுங்க எழுக... கண்முன்; தொழுகின்றேன்!
அனுதினமும் உனதுவீதி தனில்வாடும்
அசடனெந்தன் குறைகள் போக்க நினையாயா?
உணர்வில் ஒன்றும் அடியவர்க்கு துயர்தானா?
உறுதி கொள்ள உதவு நல்லைக் குமரேசா!

கதிரைக் காய்ச்சி அமைத்த தங்க இரதமேறி
கவிதை போல குளிர்பரப்பி வரவேண்டும்.
விதியை மாற்றி எழுதுகின்ற வடிவேலை
விடிவு தேடும் எமது கையில் தரவேண்டும்.
சுதிகள் சேர்த்து அமைதி கீதம் பிறந்தெம்மில்
சுவற ஆத்ம இலயமாய் உந்தன் அருள் வேண்டும்.
சதியறுத்துக் கதிகொடுக்கும் எழிலோனே
தமிழிசைக்குள் மலரும் நல்லைப் பெருமானே

20.08.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடுமெம்முன் வந்தே சிரி!

காலப் பிழையோ? கலகக்கோள் தொந்தரவோ?
நூலறுந்த பட்டமானோம்; நொந்துபோனோம் - வேலவனே
என்றெம் வினையகலும்? என்றெம் விதிதெளியும்?
இன்றும் உரைக்கலையே ஏன்?

வானமரர் துன்பமுற அன்றே பிறந்தவன் நீ
சூரத் தனமழிக்கத் தோன்றியோன் நீ - வேரழிந்து
வாடுமெம் வாழ்வைமீட்க வாய்திறந்தோர் வார்த்தைசொல்லு!
தேடுமெம்முன் வந்தே சிரி!

உன்வாசல் தானெம் உயிர்க்கு நிழலாகும்
உன்சுவாசம் தானெங்கள் மூச்சாகும் - உன்பாசம்
தானெம் உறவாகும்... தயைகாட்டு; எம்இடரின்
ஈனம் அழிக்க எழு!

இன்னல்கள் மீது இடிவிழநீ செய்யாயோ?
துன்பப்பேய் யாவும் துரத்தாயோ? - அன்பருளி
அற்புதங்கள் காட்டாயோ? ஆறா இரணமாற்றி
நற்கதியை நாட்டு நமக்கு!

தேரேறி எங்கள் திசைமுகமும் புன்னகைக்க
வா... ராசா... அள்ளி வரம்வழங்கு - சீரோடு
நாம்வாழ வாழ்த்து... நலிவகற்று! நல்லூரின்
வீதியிலே ஞானம் விளக்கு!

பஞ்சம் பசிதுடைத்து பற்றும்தீ நூர்த்தணைக்க
கொஞ்சமுன் தீர்த்தம் கொடுத்தருளு - சஞ்சலங்கள்
போக்கியே கொஞ்சியெமைப் போஷித்துச் சூழ்ந்திருந்து
தாக்கும் தடைகள் தகர்!

2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைச் சுகப்படுத்து

உன்னைவிட உலகில் யாரும் துணையில்லா
என்னை அணைத்துக்கொள்!
எனது உடல்காக்க
உன்னை ஒருகவச குண்டலமாய் நல்கையா!
சின்னச் சிராய்ப்பும் குருதிசிந்தும் காயமதும்
பென்னம் பெருந்தழும்பும் எந்தவித வடுவும்
என்னை அணுகாமற்
தடுத்துஆட் கொண்டுவிடு!
இந்த மனதை இரணமாக்க எத்தனிக்கும்
பேய்களது கைகாலைப் பிடுங்கிஎடு!
என்னுயிரின்
வலியையுன் கடைக்கண்
பார்வைக் களிம்புபூசி
ஆற்றிவிடு!
உளமோ கல்விழுந்த குளி... அலையாய்ச்
சஞ்சலப் படும்போது சாந்தப் படுத்திடவா!
எந்தன் அகமோ இடிவிழுந்து கருகாதுன்
மந்திரக் கரத்தையே இடிதாங்கி ஆக்கித்தா!
உன்னைவிட உறுதுணைகள்
யாரும் உலகிலில்லை,
நின்னைவிட யாவரையும்
யான்நம்பப் போவதில்லை,
உன்னைவிட அமைதி தர
ஒரு உறவும் எனக்கில்லை,
என்பதனால்... எனக்கு நிழலாய் நீ அபயமருள்!
உன் கருணை மழையாலென்
உளக்கோபக் கொதிப்படக்கு!
உன்பரிவுப் பனிநோக்கால் மனக்கலக்கம்
தெளிந்திடவை!
புன்னகையாம் தென்றலினால்
என்னுயிர்க்கு மருந்துகட்டி
உன் ஸ்பரிச வருடலினால்
என்ஜயம் அச்சமோட்டி
என்னைச் சுகப்படுத்து எக்கணமும்
நல்லூரா!

2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரின் நாதனை நாடு

வேலைப் பிடித்து நல்லூரவன் வீதியில்
வெள்ளி மயில்தனில் ஏறி - வந்து
மின்னுவான் ஆசிகள் கூறி - அவன்
காலைப் பிடித்திரு பத்தைந்து நாட்களும்
கண்களில் ஒற்றுவோம் கூடி - "எம்மை
காப்பாற்று" என்றாடிப் பாடி!

நல்லைத் திருத்தலம் நல்ல வரம்தரும்
ஞானம் அருள்நிலம் என்று - நாங்கள்
நாடினோம் பலபல ஆண்டு - இணை
இல்லை எனப்பல சித்தரும் தேவரும்
இறைஞ்சிய ஞானவேல் உண்டு - ஆறு
எழில்முகன் அடி தொழு... கண்டு!

நாதசுரம் தவில் தாளம் முழங்கிட
நல்ல பஜனைகள் வாழ்த்த - பக்தர்
நாவில் அரோகரா ஆர்க்க - ஆட்டக்
காவடி ஆட பிரதட்டையும் நீள
காலை மாலை சுற்றும் வேலை - காணக்
கண்நூறு இன்றுந்தான் தேவை!

நல்லூர் கொடியேற நாடே புனிதமாய்
நாளும் பரவசம் பூணும் - சனம்
நாலு கடல் போலச் சூழும்! - ஏதும்
எல்லைகள் அற்றோன் இருமாதரோடு தேர்
ஏறத் திசைதிக்கும் போற்றும் - நின்ற
இடந்தெரியாதோடும்... கூற்றும்!

கோபுரம் முன்றில் குறுமணல் வீதியில்
கேணியடி தனில் நிற்பான் - குகன்
கேட்கும் வரந்தந் தணைப்பான் - நெஞ்சின்
காயங்கள் ஆற்றும் அவன் திருநீறு காண்
கழல்தொடு; கனவிலும் வந்து - கந்தன்
கடும்இடர் ஓட்டுவான் நம்பு!

05.08.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உய்வோம் முருகால் உயர்ந்து

நல்லூரின் நாதன், நமைஇயக்கும் ஞானசக்தி
வல்லோன், நினைத்த வரம் தருவோன் - எல்லோரும்
ஏற்கும் எழில்நிபுணன், ஈடில் அருள்மழையோன்,
காற்று நிலம் அவன் தீ காண்!

நல்லூர்த் திருவிழா நாளொவொன்றும் எம் மனதுக்
கல்லைக் கரையவைத்துக் கற்பூர - வில்லையாய்ப்
பற்றி எரியவைக்கும்! பாவ வினைபொசுக்கும் !
குற்றமற்றுப் போம் எம் குணம்.

இருபத்து ஐந்து எழில் நாட்கள் நம்மைப்
பெரியர் சிறியரென்ற பேதம் - கருதாமல்
வாழ்விக்கும் நாட்கள்! வணங்கி எழு; எங்கள்
ஊழ்வினையும் நீறும் உணர்!

செம்மை, வே றெங்குமிலா சீர், அழகு, நேர நேர்த்தி,
தம்மைப் புதுப்பித்தல், சான்றாதல் - அம்மா
அகில உலகில் அலங்காரக் கந்தன்
புகழைவிட எங்கு புகல்!

தங்கத்தில் கூரை தகதகக்கும் இன்னுமொரு
தங்கமயில் என்று தரைஜொலிக்கத் - தங்கமயம்
ஆன பொருளென்ன? ஆட்டும் இருட் துயர
ஈனம் அகற்றவா ஈது?

பேரழகின் உச்சம் பெருமைகளின் மெய் மிச்சம்
ஊர் உலகே கூடி உருகுதினம் - ஆறுமுகன்
நேர்கண்டுன் துன்பப்பொய் நீக்குமிடம், நல்லூரின்
தேரடா தேரடா தேர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பறமும் தேரும் தலைமுழுகும் தீர்த்தமதும்
இப்பிறப்பில் கண்டிடவே என்னதவம் - எப்பிறப்பில்
செய்தோமோ? நல்லூரில் சொர்க்கச் சுகம் துய்த்து
உய்வோம் முருகால் உயர்ந்து!

மின்னிறங்கி னாற்போல் மிகநலியும் 'மின்னேற்றும்
மின்கலமே' போன்ற வெறும் மனதை - மின்னேற்றி
மீண்டும் நிறைக்கும் விழாநல்லை மின்விழாதான்
வேண்டு, வரங்கள் விரைந்து! - 2018 -

## உயிர்கள் உன் விழிப் பார்வைக் கேங்குது !

கால காலமாய் வாழு கின்றவா!
காற்று மூச்சையும் ஆளுகின்றவா!
கோல மாமயில் ஏறி... எண் திசைக்
குற்றப் பாம்புகள் கொல்லுகின்றவா!
வேல் தரித்தவா! சூர...மும்மலம்
வீழ்த்தி நெஞ்செலாம் சாந்தி சேர்ப்பவா!
"நாலரைக்" கெழுந்தூர் மனங்களில்
ஞான மூட்டிடும்....நல்லை வேலவா!

உந்தன் வீதியில் ஊர்கள் கூடிட,
உன் திசையெலாம் பக்தி பூத்தெழ,
உந்தன் ஆலய மணிகள் ஆர்த்திட,
உந்தன் மேனியில் பொன் குவிந்திட,
மந்திரக் குழல் மாய மத்தள
மாரியில்...நிலமே குளிர்ந்திட,
உந்தனின் கொடி ஏறியுள்ளது!
உயிர்கள் உன் விழிப் பார்வைக் கேங்குது !

"வாகனங்களில்" வந்து செல்லுவாய்.
மஞ்சம், வேல் விமானம், சப்பறம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரில், நின்று நீ தீமையோட்டுவாய்.
தீர்த்தம் தந்துமெம் பொய் கழுவுவாய்.
காவடியொடும் ஆடி வாழ்த்துவாய்.
கற்புரச் சுடர்க்குள்ளும் தோன்றுவாய்.
நீ... திருவிழா நாளில் எங்களின்
நிழலும் பரவசம் பெற...அருளுவாய்!

சோதனைகளை வேதனைகளைச்
சுட்டெரித்த நின் சொர்க்க வாசலில்
சோதனைகளேன் இன்னும்? உன்னடி
தொழத் தடைகளா இன்றும்? எங்களின்
பாதையில் ஒளி பாய்ச்சும் உன்விழி
பயம் விரட்டணும் என்றும்! மண்ணிலே
தீதெலாம் அகன்றோட ...உன்னருள்
சேர...இன்பமே தேற ...நேருவம்! 10.08.2019

(பெரிய வெள்ளி குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சோதனைக் கெடுபிடி களுடன் திருவிழா நடந்த போது எழுதியது)

## ஓரவிழிப் பார்வை ஒன்றுக்காய்....

தேரடியில் வில்வமர நிழலில் ஆறினோம் - வள்ளி
தெய்வயானை யோடு வருவாயா தேடினோம்!
ஊரடங்கி விட்ட பின்னர் ....நல்லை வாசலில் -வந்துன்
-னோடு பேசக் காத்திருந்தே வாடி.. ஓடினோம்!

மூலஸ்தானத்துள் உறைந்து மோன மூர்த்தியாய் - நீயும்
மூடிக்கொண்டிருந்து என்ன ஆகும் சொல்லையா?
ஏறெடுத்துப் பார்த்திடாது வீதி சுற்றியா - நீயும்
ஏகுகிறாய்? நின்றெம் குறைகள் கேட்டுச் செல்லையா!

உன்னை மட்டும் நம்புகின்ற உண்மைச் சொந்தமாய் - நாங்கள்
உயிர் கனிந்தழைக்க விட்டுப் போதல் நியாயமா?
மன்னரோடு ஏனையோரை நம்பி நொந்தமாம் - நீயும்
வரந்தராது விட்டகன்றால்... என்ன செய்வம் யாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியலில் காசுமிட்டு சூடம் ஏற்றியே - உந்தன்
உளம் விரும்பும் நேர்த்தி தீர்க்க வேணும்... என்றொடா
இன்றுமுள்ளாய்? அன்பை மட்டும் நல்கும் ஏழை நாம் - “உடன்
இரங்கு” என்று பழிகிடப்போம்... பார்க்க மாட்டியா?

ஓர விழிப்பார்வை ஒன்றுக்காக ஏங்கினோம் - வீதி
ஓரம் நின்றுன் ஆசி தேடித் தானே வாடினோம்!
“யாமிருக்க ஏது பயம்” என்னு வேலவா - நாங்கள்
யாசிக்கிறோம் உந்தன் அன்பை மட்டும்... அருளடா!

12.08.2019

## இன்னுமின்னும் நூறு சந்ததிக்கும்....

சந்தன வாசமும் செந்தமிழ் வேகமும்
தண் மணி நாதமும் தவழும்.
சங்கொலி, தேன் குழல், சந்தக் கவிலயம்,
சல்லாரியால் இசை மலரும்.
மந்திர கோஷமும் கர்ப்பூர தீபமும்
வருடவே “உள்ள” நெய் உருகும்.
வள்ளி தெய்வானையும் வர எழுந் தருளுவாய்
வழியெங்கும் தெய்வீகம் பரவும்.

விந்தைகள், அதிசயம், வெவ்வேறு அற்புதம்,
வீதியில் நித்தியம் நிகழும்.
வேறிடம் தனிலில்லா ஆன்ம அதிர்வென்றும்
மேவும்... நல்லூரடி முழுதும்.
சுந்தரக் குகன் ஒளி சூழும் இருள்சுடும்
சூழலில் பரவசம் பெருகும்
சொக்கி மரங்களாய் நிற்பம் யாம்; வேல் முகம்
சூரியன் போல் வரம் அருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் துன்பங்கள் எத்தனை எப்படி
எவ்விதம் வந்தாலும் கவலை
ஏனுனக் கெண்ணடா ஈசனின் மைந்தனை
இடறவைப்பான் சோகப் புயலை.
மன்னவன் வாழ்கிற மண்ணிலே கால் பதி
மானாகும் உன் மன முதலை.
வாய் விட்டுக் கேள் வரம் நோய் பட்டுப் போய் விழும்
வான் தொழும் உன் பெயர் புகழை!

கன்னத்தில் ஏன் கங்கை? கந்தனை நம்பிடு
காத்தனன் அன்றெங்கள் உயிரை
காத்திடுவான் நாளை கொற்றம் குடிகளை
காலமும் மீட்குமெம் எழிலை.
இன்தமிழாற் தொழு மெல்லிசை பெய்திடு
இரசிப்பானவன் உண்மை மனதை
இன்னுமின்னும் நூறு சந்ததிக்கும் நல்லை
இறைமகன் நல்குவான் அருளை!

17.08.2019

# பிழைபோக்கி அணை

அருளூட்டி அரசாளும் தேவன் - ஞான
அழகூறும் தமிழ் மண்ணின் சீலன்
பொருளோடு புகழ் கூட்டும் பாலன் - நாளும்
புதுமைகள் தரும் நல்லை வேலன்!

உயிரோடு உறவாடி நின்று - ஊரின்
உணர்வுக்குள் குடியேறிக் கொண்டு
அயல் உய்ய கொடியேறி இன்று - வேலும்
அவலங்கள் சுடும் சுற்றி வந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாளில் தெரு சொர்க்க மாகி - நல்லை
திசைமூடி அடியார்கள் கூடி
வரும் வேலைப் பணிந்தின்று பாடி - கேட்டு
வரம் கொள்வர்...புனிதங்கள் பூசி

தவிலோசை குழலோசை யோடு - ஈரத்
தமிழோசை குளிரூட்டும் பாரு
கவிதைகள் பொழியும் ஊர் நாவு - கந்தன்
கரைந்தன்பு தர...நாளும் நேரு!

வழியெங்கும் குகன் பாதம் போகும் - எங்கள்
மனதோடு அவன் வாயும் பேசும்
விழி நீரில் நனைந்தந்த நேரம் - வேலன்
விளையாட்டில் பெறும் நூறு ஞானம்!

அரசர்க்கும் எளியோர்க்கும் ஒன்றே - சட்டம்
அனைவர்க்கும் அருள்வானே நன்றே
பெரு நல்லைப் பதி வாழும் அன்பே - எங்கள்
பிழைபோக்கி அணை நீழல் தந்தே!

19.08.2019

# வேட்டை

வாளை எடுத்து நல் வேதியர் - முன்னே
வந்து கம்பீரங்கள் காட்டிட - திரு
வேல்கள் பிடித்து நிரையென - பலர்
வீறுடன் தோன்றித் தொடர்ந்திட - கொம்பு
பேரிகை ஆர்க்கத் தவில் குழல் - பரிப்
பீடுக் குளம்பொலி போலெழ - திமிர்
ஏழு குதிரை அணிநடை - தனில்
ஏறினான் வேலன் புவிதொழ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்முகம் அன்ன அணிநடை - சுற்றிப்
புழுதிப் படையாய் அடியவர் - தெய்வப்
போர்க்களம் ஆனது வீதியும் - பெரும்
போர் மன்னனாகினான் கந்தனும் - புகழ்
ஆர்ப்பொலி பொங்கத் துணைவியர் - சூழ
ஆரோகணித்துப் பரிகளில் - நல்லை
"ஓர் முகப்" பொன்விழா தன்னிலே - புது
உதாரணன் ஆனான் கடம்பனே!

வேட்டைத் திருவிழா என்பதில் - வேலின்
வீரத் திரு உலா வந்தது - திரு
வேட்டைகள் ஆடி விலங்குகள் - விழ
விந்தைகள் கோடி பொலிந்தது - குகன்
வேட்டைகள் ஆடினான் நெஞ்சினை - மன
வினை அற ஏவினான் வேலினை - தமிழக்
கோட்டையைக் காக்கும் குமரனை - பணி;
கூற்று நெருங்காதெம் வீட்டினை!

27.08.2019

## காத்துக் கிடக்கின்றேன்

கனவென்ற அன்னை நனவென்ற தந்தை
கலந்தாட வந்த சிறுவாழ்வு
கதையாகு மாமோ கவியாகு மாமோ
கதி என்ன நாளை? பதில்கூறு!
மனமென்ற மாயம் மடைதாண்டி ஓடும்
வழி தேடிப் போகத் தெரியாது
வரம் நாடி வாடி தவம் செய் நின் சேயும்
வளர்ந்தோங்க நீயும் அருள் தூவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைவாசி நேரம் அழிந்தோய்ந்து போக
அரைவாசி தானோ வருங்காலம்?
அதை யாரும் ஊரும் அறியாது....நோயின்
அணைப்புக்குள் வீழும் படி சூழும்
வரலாறு....இன்று சுவை சோறு விட்டு
மருந்தோடு மாளும் வரை நீளும்
வதையான காலப் பிணி தீரு மாமோ?
வடிவேலா சொல்லு பரிகாரம்!

அழகான வாழ்வு அதைத் துய்த்திடாது
அதில் ஆசைக்கேங்கி சுகம் குன்றி
அலைந்தாடித் தானே அழித்தேனே நாளை
அருள் தேடக் கூட மனமின்றி
பிழை என்று கண்டும் "இது போதுமென்று"
பிழைக்கின்ற நீதி தனைக் காட்டி
பிணி தீர்த்திடாது பிணித்தாய்....என்னோடு
பிணை...நிம்மதிக்கு உயிருட்டி!

உனையன்றி யாரும் உதவார்கள் என்று
உணர்வொன்றித் தானே உயிர்வாழ்வேன்.
ஒளிதந்தி டாது இருள் தந்து வாழ்வை
உயர்த்தா திருப்பின் இனி வீழ்வேன்.
"எனைவிட்டு யாரை எழுந்தோங்க வைத்தாய்
இறைவா" என்றுன் தண் நிழல் நின்றேன்.
இனி உந்தன் இஷ்டம்; பதில் சொல்லுன் எண்ணம்
எது? இன்று காத்துக் கிடக்கின்றேன்!

2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகக் காலை

'நாலரைக்கு' நல்லூரின் மணியின் நாதம்
நாற்திசையைத் துயிலெழுப்பும்! சேவல் கூட
பாடும் 'பள்ளி எழுச்சியின்' தேன் பாடல் கேட்டே
படபடென்று எழுந்து கூவும்! கிழக்கில் மெல்ல
ஊறிவரும் ஒளி... இருளோ டுடல் செய்யும்!
உயிரை... வரும் குளிர் காற்று வருடிச் செல்லும்!
பூசையெழும்... தீபத்தால் மூலஸ்த்தானம்
பொன்விடிவை அயலுக்குப் பரிசாய் நல்கும்!

வானுயர்ந்த கோபுரங்கள், விசால வாசல்,
மண்டபங்கள், அமுதூறும் கேணி, மாட
வீதியெங்கும் தெய்வாம்சம் சுரக்க... சொர்க்க
விழாநாளின் புலர்வில் இளம் பக்தர் கூட்டம்
வீழ்ந்து 'அங்கப் பிரதட்டை' செய்ய... தூங்கும்
விண் விழிக்க "அரோகரா" என்றெழுமாம் கோஷம்!
வேலவனின் கால்நடக்கும் குளிர்ந்த சுற்று
வீதி மணல் பட... உடல்கள் புனிதம் பூணும்!

"பட்டாடை நகை மினுங்க வருவோர் தானே
பலர் என்பீர்... இல்லையில்லை விடிவின் முன்னே
கிட்டவந்து பார்ப்பீரேல் கிறங்கிப் போவீர்!
கிலுகிலென்று இளம் அடியார் பல்லோர்... திக்கு
எட்டினிலும் திரண்டு தம் தம் நேர்த்தி தீர்ப்பார்!
இதயம் மெய் கனிந்துருண்டு சிலிர்த்து நிற்பார்!
தொட்டு வெயில் சுடும் முன்னர்... ஆன்ம ஞானம்
சுவைத்தகல்வார்... நம் மரபை எவர்தான் சாய்ப்பார்?

12.08.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நீக்கு!

இப்படியோர் காலம் இதற்குமுன்பு வந்ததில்லை!
இப்படித் திருவிழா
இதன் முன் நடந்ததில்லை!
குண்டு விழவிழவும், கூடு குலைந்திடவும்,
சண்டை தொடர்ந்திடவும்,
சனங்கள் பெயர்ந்திடவும்,
பொம்பர் அடித்திடவும், போர் வாய் குதறிடவும்,
இம்மண்ணில் ஊரடங்கு இருந்திடவும்,
பதறாமல்
கொடியேறிக் கோவில் குளிர்ந்து
மலர்ந்ததன்று!
அடிஅழிப்பு பிரதட்டை அத்தனையும்
நடந்ததன்று!
காவடி, தூக்கு காவடிகள், அன்னதானம்,
நீர்ப்பந்தல் நிறைந்ததன்று!
கிடைத்த நிழலினிலே
பாட்டு பிரசங்கம் பஜனை நிகழ்ந்ததன்று!
கூட்டம்....கடைத்தெருவில்
குவிந்து மகிழ்ந்ததன்று!
வானாலே குண்டுகளும் வன்கணையும்
விழும்போதும்..,
நேர் முன்னே யுத்தம் நெருங்க அதற்குள்ளும்..,
சீராய்ப் பொலிந்த திருவிழா
கண்கள் காணா(து)
ஊர்களை மட்டுமன்றி
உலகையே மிரட்டி மாய்க்கும்
'நோய்க்கிருமி யாலே' நூறு சதவீத
ஆரவாரம் இன்றி அடங்குவதைப் பார் வேலா!
பூசை உலாக்கள் வழமைபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்திருக்க
ஏதும் பயம் ஐயம் இன்றிச்
சுகாதாரப்
போதனைகள் பேணிப் பொதுமக்கள்
உன் எழிலைக்
காண உதவிடடா!
கனிந்த பக்தர் யார் எவர்க்கும்
தீமை வராதித் திருவிழா
மிகுசிறப்பாய்
நீள...விழி ஒளியால்...
நின் நிழலால்...நின் அயலை
நாள்தோறும் தொற்றுநீக்கி
நமை அழைத்து அருள் தாடா!!

01.08.2020

## பழி சாய்க்க வா!

இடரேதும் தொடராதெம் பொழுதோடணும் - எங்கள்
இரு கண் உன் எழில்முற்றம் நிதம் காணணும்.
கொடுமைகள் தொலைந்தெங்கள் குடி வாழணும் - உந்தன்
குளிர் வேலின் ஒளியில் நாம் முடி சூடணும்!

கடலாக அலைமோதும் திருவீதியில் - கந்தன்
கழல் காண வருவோரின் மனம் பீதியில்.
அட எட்டுத் திசை திக்கும் கொடுநோயினில் - உந்தன்
அருள் ஒன்றே எமைக்காக்கும் வரும் நாளினில்.

கரம் தோய்த்து, இடம்விட்டு, வரவேற்கிறோம் - முகக்
கவசங்கள் உடன் நின்றும் உனைப் போற்றுவோம்.
திருநாளில் வரும் உன்னைப் பணிந்தேற்றினோம் - எங்கள்
திசை எட்டும் சுகம் காண உதவென்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமைக்குக் குறையாத விழா என்பது - தொற்றின்
வளைப்புக்கு இடை இன்று நடக்கின்றது.
களியாட்டம் எதுமில்லை... வரலாறிது - வெளிக்
கடை கண்ணி இ(ல்)லை பக்தி பொலிகின்றது!

உளச் சுத்தம் உடல் ஊரின் உயிர்ச் சுத்தமும் - என்றும்
உலகுக்கு மிகத்தேவை எனும் தத்துவம்
பழக்கத்தில் வரும் காலம்... ப[illegible] தந்திடும் - வேலின்
பளிச்சீடெம் உயிர் அச்சம் தல[illegible]க் கொன்றிடும்.

துயரேதும் அணுகாது வழிகாட்டடா - நல்லைத்
துரையே... எம் எதிர்காலம் தெளிவாக்கடா!
உயிர்காத்து அயல்காத்து ஒளி ஊட்டவா - நாங்கள்
உனை நம்பி இருப்போம் நம் பழி சாய்க்க வா!

11.08.2020

## நின்று தடு ஊறு!

கவிதை என்ற உடலில் வாழும் உயிராகி
கனவு கோடி நனவில் நித்தம் தருவாயே
செவியில் வீழ்ந்து இதயம் தோய்த்து மன ஏரி
தெளியவைக்கும் கவி அன்றாடம் அருள்வாயே!
தவிலிசைக்கு தலைஅசைக்கும் திரு வீதி
தமிழ் மணக்க....எனது சிந்தும்; இரசி நீயும்.
புவிவெறுக்கும் பொழுதும் ஏக்கம் கிடையாதே
பொருள் உணர்ந்து புரி நீ...கந்தப் பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்கள் விழிசொரிந்து அழுவார்கள்.
அயலவர்கள் உனை உணர்ந்து தொழுவார்கள்.
கொடியர் உந்தன் கருணையாலே குனிவார்கள்.
குவலயத்தர் எவரும் உன் முன் பணிவார்கள்.
இடிவிழுந்து கவலை சூழும் கணமெல்லாம்
இருளும் நெஞ்சில் உனது வேலே சுடராகும்.
மிடிமை போக்கென் கவிதை மொட்டு மலராகும்.
விடியும் துன்பம் முடியும் வென்று நிமிர்வேனே!

எழுக தேரில்... திசைகள் மீது சொரி நீறு!
இனிய தீர்த்தம் மருந்து போல தெளி வேறு!
உழுது சாறு...மனது எங்கும் அழுக் காறு!
உயிரின் ஞானப் பசிக்கு ஊட்டு அருட்ச் சோறு!
பழுது பாரு புவியில் எங்கும் தக ராறு!
பழியில் வந்த கொடிய நோயும் விழச் சீறு!
எழுதும் எந்தன் கவி...இடர்கள் சுடு மாறு
இயக்கு...நல்லை அரனே....நின்று தடு ஊறு!

14.08.2020

## விழா உலா

உன்னுடைய வீதியில்நீ உலவும் போது
உன்னெழிலின் சூடுருக்க... பனியாய் நானும்
உன்னடியில் உருகிடுவேன்! உன்னைக் கண்டென்
உயிர்உளமும் குளிர்ந்து... பரவசத்தில் ஆழ்ந்து
இன்பத்தின் எல்லைதொட்டு... துன்பம் விட்டு...
எல்லாமுன் கருணையென்றுன் நிழலைச் சேர்வேன்!
என்னையும் நீ உச்சிமோந்து அணைப்பாய்: நீயே
'என்சுருதி ... நான் கருவி' என்றும் காண்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பிரார்த்தனை என்றென்றும் ஒன்றே!
“எல்லாம்நீ பார்த்துக்கொள்: வெற்றி தோல்வி,
என்இன்பம் துன்பம், என் நன்மை தீமை
எல்லாமும் உன்பொறுப்பே! இன்றும் கூட
என்மனது கேட்டதெல்லாம் தாராய் நீயே!
எனக்கான ஒன்றை நான் கேட்காப் போதும்
என்றும் நீ தந்தாயே! “துணையாய் மட்டும்
இரு நீயே” என்பேன் நீ உலவக் கண்டே!

நாதமழை, பஜனைமழை, அடியாரின்கண்
-ணாலும்மழை, ‘அரோகரா’ என்றார்ப்போர் நெஞ்சின்
வார்த்தைமழை, தூபங்கள் தமையே தீய்க்க
வாசமழை, கர்ப்பூரம் கருகும் தீபத்
தீயின்மழை, நீ நடக்கும் வழியிற் தூவும்
பூவின்மழை, உன்வைர வேலாற் பொங்கும்
ஞானமழை, நல்லூரின் திருவிழாவில்
நனைந்துவந்தால் பசுமையாகும் வாழ்க்கைப் பாலை!

30.08.2020

## முருகா முருகா முருகா

முருகா முருகா முருகா

நிதமும் வருவாய் மயிலில்
நிழலாய்ப் படிவாய் உயிரில்
விதியின் சதியை உதையும் கழலே
வினையை பொடிசெய் கனலே குளிரே

(முருகா)

உனையே தொழுதோம் கணமும்
உனையே பணியும் மனமும்
எனினும் சலனம் எழுமே அலையாய்
இவையும் தணிய எமைமீட் டருள்வாய்

(முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடரும் தொடரும் தொடரும்
இடியில் இதயம் அதிரும்
நொடிகள் அவிழும் கணமும் விலகும்
நொடியும் எமையும் நிமிரும் படிசெய்

(முருகா)

உயிரின் சுமைகள் பகிர்வாய்
உணர்வின் வலியைச் சுடுவாய்
செயலும் சரியாம் திசைசென் றிடவே
திடமும் தெளிவும் திறனும் தரும் தாய்

(முருகா)

அழகே அழகின் ஒளியே
அணுவே அகிலத் திசையே
மொழியின் ஒலியே முதலே முழுதே
முடிவே தொடரும் பிறவி முளையே

(முருகா)

இருதேவியர்கள் தொடர
இறைவர் அமரர் பணிய
திரு நல்லையதன் திருநாள் தனிலே
திரளும் அடியார் குறைதீர்த்திடும் வேல்

(முருகா)

15.10.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏது வழி சொல்

உனது நிழல் மட்டும் எனது இடர்த்தீயை
உருவி அணைத்தோட்டுமாம் -திசை
உலவும் திருப்பாதம், அபய கரம், நேத்ரம்,
உதவி நிதம் ஊட்டுமாம்.
நனவில் அலைத்தாலும் கனவில் வழிசொல்லி
நலிவுகளைப் போக்குமாம் -அற
நகலுன் எழில் நாமம் நமது மிடி சாய்க்கும்
நமனை அடித்தாட்டுமாம்!

உயிரும் வதைகின்ற, உடலும் சிதைகின்ற,
உலகம் இதுதானடா -எவர்
உருவமதும் எந்த உயிலும் நிலைத்திங்கு
உறுதியடை கின்றதா?
மயிரும் உதிர்கின்ற வகையில்...எவர் வாழ்வும்
மறையும் விதி நீளுமா? - எது
வழியென் றுரை நிம் மதியும் பெற... இந்த
மருமப் புதிர் தீரடா!

கடலின் அலைபோல கவிதை வரிபோல
கனவில் வருகின்றவா - நிதம்
கருணை மழையாக கடின மனப்பாறை
கரையப் பொழிவாயடா!
விடையில் பொருள் நூறு விரியும் படி... சொல்ல
வினவி எமைத்தூண்டுவாய் - புது
விதிகள் வரைகின்ற விடிவின் ஒளியே... முன்
விரியும் இருள் தூற்றுவாய்!

01.05.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனருள் வழி செய்யும்

வானம் குனிந்து வணங்க முகில்களோ
மாலையாய் வீழும் இடம் - பல
வாச மலர்கள் விரும்பியே வந்திறை
மார்பில் குவியும் தலம் - தினம்
கானம் பொழியும் குழல் தவில் தேன் மணி
காதில் அமிர்தமிடும் - உயிர்க்
கந்தன் வடிவேலாய்க் காட்சி கொடுப்பதைக்
காணுதல் கோடி சுகம்!

வானத் தமரரும் வந்து வரம் கேட்டு
வாசலிற் காத்திருப்பார் - பரி
வாரக் கடவுளர் பக்கத் துணை நின்று
மாரி அருள் பொழிவார் - தங்கள்
ஈனம், வினை, மனப்பாரம் இறக்க
எழும் நரர் நேர்த்தி வைப்பார் - திசை
எங்கும் சுகந்தம் பரப்பும் ‘விழா எழில்’
எண்ணுவோர் முக்தி கொள்வார்!

நல்லைக் குமரனின் ஞான மடிதனை
நம்பியோர் நொந்ததில்லை - கோடி
நன்மை தரும் நிழல் தன்னில் இளைப்பாறும்
யாரும் நலிந்ததில்லை - வெறும்
கல்லும் மரமும் உலோகமும் அல்ல
கருணை அருள் பொழியும் - நல்லைக்
கந்தன் புகழுக்கு ஈடில்லை; அம்மண்ணில்
கால்பட்டால் இல்லை தொல்லை!

எத்தனை போர்த்துயர் சூழ்ந்தது நேற்று
எழில் விழா நின்றதுவா? - இன்று
இந்தக் கிருமிக் கொடுமைக் கிடையிலே
இன்னருள் ஓய்ந்திடுமா - இடர்
அத்தனையும் ஓட்டும் அன்பு வயிரவேல்
அற்புதம் செய்திடுமாம் - எங்கள்
அல்லல் அகலும்... அடியார் மகிழ
அவனருள் வழி செ(ய்)யுமாம்!

24.06.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகளாய்த் தாங்கு!

காலெடுத்து நீ நடந்தெம் கண்முன் வந்து நில் - நெஞ்சின்
காயமாற்ற யாது தான் மருந்து கண்டு சொல்!
பாலெடுத்து ஊட்டு உயிரின் பசியும் போக்கிச் செல் - என்றும்
பாசம் காட்டு தாயைப்போல்...இல்லாட்டி நாமோர் கல்!

காலமாற்றம் கோலமாற்றம் வந்து ஆட்டுதே - எங்கள்
கனவில் நனவில் மண்ணை அள்ளி தூவி வாட்டுதே
கோளும் எம் குணம் நடத்தை தம்மை மாற்றுதே! - நாமும்
குற்றம் செய்யத் தூண்டி தண்டனை விதிக்குதே!

நீதி நியாயம் நீர்த்துப் போன காலமின்றடா - யாரும்
நெஞ்சில் உண்மை அற்று வாழும் பொய்யின் சேய்களா?
வேதம் தர்மம் கற்று கேட்டிடாது செல்வமா? - நாமே
வில்லராவோம் எங்களுக்கு...மீட்பன் எங்கடா?

காரிருளாய் எம்மை நோக்கி தீமை சூழுது - கலி
காலம் தன்னிலே அதர்மம் வாகை சூடுது
வேர்கள் வாடி கிளை ஈடாடி வாழ்வு அஞ்சுது - நீ
விழுதுகளாய்த் தாங்கு உடன்...ஏன் தவிர்ப்பது?

11.07.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ எல்லாம் பார்த்துக் கொள்!

நீ எல்லாம் பார்த்துக் கொள்ளூ!
நீ வரும் தடைகள் போக்கு!
நீ எது சரியோ... செய்து
நிம்மதி அயலில் ஊட்டு!
நீ... வேலால்...தொற்றி மாய்க்கும்
நிட்டுரம் வீழ்த்து! கண்முன்
நீ வராப் போதும் எங்கும்
நிறைந்துமே தொற்று நீக்கு!

உன்கொடி ஏறு துள்ளே!
உயிர்ச்சேய்கள் தவித்து நொந்து
வெந்துளார் வெளியே! வேலை
விழி காணாது இடியும் நெஞ்சே!
என்ன நாம் புரிந்த பாவம்?
இழவெலாம் மாளச் செய்யே!
உன் முகம் காண வேணும்
ஒரு வழி திறந்து வையே!

இப்படி... தொண்டர் அற்று
இதயத்தில் சுமப்போர் அற்று
அற்புதப் பவனி அற்று
ஆள் அரவம் தான் அற்று
எப்பவும் விழா நடந்த
தில்லை! ஏன் இந்தத் தீர்ப்பு?
சொப்பனம் தனில் என்றாலும்
சுற்றும் வேற் காட்சி காட்டு!

உனைமட்டும் நேர்தல் அன்றி
உனைக்கெஞ்சிக் கேட்டல் அன்றி
உனதருள், துணைக்கு ஏங்கி
உள்ளுக்குள் அழுதல் அன்றி
மனதுக்கு மருந்து ஏது?
வடிவேலா உன்மேல் பாரம்
தனைப் போட்டோம் இடர்கள் மாற்று!
தடை தகர் அணை...வா...மீட்டு!

11.08.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி நீயே...

எது எந்த வேளையில் எனைச்சேர வேண்டுமோ
எழுதிநீ தந்து விடுவாய்.
இடிவீழும் போதிலும் இடியாமல் மீட்டெனை
இதமாயுன் நெஞ்சில் நடுவாய்.
"விதியென்ன" கேட்கையி ) "விளைவென்ன" தேடையில்
விசயம் நீ என்று பகர்வாய்.
வினையாலே தாழ்கையில் வி க்கு மாள்கையில்
விடுவித்தும் புத்தி தருவாய்.
சதிநூறு செய்பவர் தலைதொங்கி ஓடவும்
தருணங் கொணர்ந்து மகிழ்வாய்.
தமிழாலே வெல்கையில் தருமவழி செல்கையில்
தலைகோதி உச்சி முகர்வாய்.
கதிநீயே என்று நின் கருணைக்கு ஏங்கினேன்
கடைக்கண்ணைக் காட்டு குகனே!
கரந்தந்து தூக்கெனை மடிதந்த பார்த்தணை
கடைசிவரை நல்லை அரனே!

அலங்காரக் கந்தனாய் அழகான ன்னனாய்
அயலெங்கும் உந்தன் அருளே!
அதுதாண்டி செல்வமும் அளிப்பாய்மெய் தேடிடும்
அனைவர்க்கும் நீயே பொருளே!
வெளிவேசம் ஆயிரம் மிகுசெல்வர் போட... நீ
விரும்புவாய் அன்பின் உறவே.
விடைதந்து ஏழ்மைக்கும் விருதாக நிம்மதி
விளைவிப்பாய் நீயே உயிரே!
வலைவீசும் நோய்நொடி... வசமாக மாட்டுவேன்
வலைவெட்டி மீட்க வருவாய்.
வலிமைகள் ஊட்டுவாய் வருமானம் கூட்டுவாய்
மகிழ்வையென் உறவுக் கருள்வாய்.
'விலைபோயிடாப் பொருள் விழுமட்டும்' என்றுயான்
விளங்கவும் கீர்த்தி தருவாய்.
"விதி... நீயே" கண்டுளேன் விடுகதை வாழ்க்கையை
விடுவித்து ஞானம் பகிர்வாய்.

23.08.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் காணாக் கோலம்!

மாசற விளக்கு ஏற்றி
மாலை,மாவிலை,பூ, சூட்டி
வாசலில் கும்பம் நாட்டி
வரவேற்புப் பாக்கள் மீட்டி
ஆசையாய் வடை,கற்கண்டு,
அவல், சுண்டல் படைத்து நீட்டி
ஆசி நீ தர நாம் ஏற்போம்!
அருள் மழை பொழிவாய் பூப்போம்!

மண்டகப் படியை நித்தம்
மனம்போல வைப்போம். நீ நின்
பொன் வீதி உலாவில் வந்தெம்
புதிர் தீர்த்து வாழ்த்து தற்காய்
கண்கவர் சோடனைகள்
கட்டுவோம். பிரசாதங்கள்
உன் அடியார்க்கும் தந்து
உன் தயை பெறுவோம். உய்வோம்!

இன்று நின் விழாவில்...'உள்ளே'
ஏகாந்தனாய் நீ சுற்ற,
உன்கடைக்கண் காணா தெங்கள்
உணர்வுகள் தவித்துக் கத்த,
மன்னனுன் வரவுக் கேங்கி
வாசலில் கும்பம் ஏற்றி
நின்று பார்த்துள்ளோம்! தொற்றும்
நெருப்புள் நாம் தனித்துக் காத்தோம்!

ஆள் அரவங்கள் அற்ற
அயல்; மௌனம் திரண்ட முற்றம்.
வாழ்வில் முன் காணாக் கோலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமநோய் பெருகும் காலம்.
சூழலில் திருவிழாவின்
சுவைகளைப் பறிக்கும் சட்டம்.
ஊழ் வினைப் பயனா? வேலா
உடை..நீ இந் நோயின் கொட்டம்!

மனதினைத் துடைத்து, ஆங்கே
மண்டகப் படியும் வைத்து,
உனை அகம் அழைத்து, உள்ளக்
கண்ணில் உன் பவனி பார்த்து,
"நனவிடர் மாள வேண்டும்
நல்லூரா உதவு" என்றோம்!
உனது வேல் 'உள்ளே சுற்றிப்
புறத்துயர்' ஓட்ட ...நேர்ந்தோம்!

23.08.2021

# காத்துள்ளோம்!

உன்னையே நம்பித் தானே
உடல், உயிர் வாழு கின்றோம்!
உன் கரம் காக்கும் என்றே
உறுதியாய் நம்பி நின்றோம்!
என்னடா இந்தத் தொற்று
எங்கெங்கோ வாயை வைத்து
இன்று எம் காலைச் சுற்றும்!
எம் திசை தனிலும் நிற்கும்!

உன்னையே நம்பி நின்றோர்,
உன் அருள் காக்கும் என்றோர்,
உன் பணியாளர், உந்தன்
ஒளியன்றி...மருந்தும் தேடார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நோய் வாயுள் நொந்து
இருக்கவோ? இறப்பை நோக்கிச்
சென்றிடும் அவரை உன் பொன்
சேவடி காப்பாற் றாதோ?

இயற்கையை மறுத்த தாலே
இயற்கையை வெறுத்த தாலே
இயற்கையைப் பகைத்த தாலே
இயற்கையை அழித்த தாலே
இயற்கையின் தண்டனை தான்
இப்பிணி என்கின் றாரே...
இயற்கையும் அறமும் ஊழி
என்பதும் நீயே தானே..!

இயற்கையை இறையை ஊழி
என்பதை மறந்தோர்....எண்ண;
உயிர்களை உருட்டி ஆட்டும்
உன் விளையாட்டுப் பற்றி...,
இயங்கியல் பற்றித்...தேர்ந்தும்
"எல்லாம் நீ" என்று வாழும்
அயலவர் நமையும் காக்க
அருளாமை சரியோ ஐயா?

ஊர் முகம் பார்க்க வில்லை.
ஒரு வார்த்தை பேச வில்லை.
நீரோடு...பழநிப் பஞ்சா -
மிருதம் நீ தரவு மில்லை.
தேர் வெளி வீதி இல்லை.
தீர்த்தமெம் வாய்க்கும் இல்லை.
கூர் வேலால் என்ன செய்யக்
குறித்தாய்? நாம் நலமாய் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பஞ்சங்கள் வந்தால் என்ன
பாரெல்லாம் வெந்தால் என்ன
அஞ்சோம் யாம்” என்றோம் நல்லை
அருள் நிழல் தனைத்தான் நம்பி
வெஞ்சமருள்ளும் வாழ்ந்தோம்!
விரைந்து நின் திக்கில் சூழும்
நஞ்சு நோய் இதனை ஓட்டி
நற்பதில் சொல் காத் துள்ளோம்!

26.08.2021

## நெஞ்சின் சஞ்சலம் நீக்கு!

நாளை, மறு நாளை,என்னதான் ஆகுமோ?
நல்லை நாயகனே அதைப் பார்த்திடு!
சூழ்ந்த துன்பம்... யாம் தொட்டுப் பரவாமல்
சூரழித்த வேலாலே மறித்திடு!
பாழ்படர்ந்துமே பக்கத் தயலுக்கும்
பற்றிடாது நீ காப்பரண் போட்டிடு!
வாழும் பிள்ளைகள் வயது முதிர்ந்தவர்
மலர்ந்திருக்கிறார்..மருந்து தெளித்திடு!

ஊரோ டொத்து உற்ற துயரிடை,
உயிரை வாட்டும் தொற்றுப் பிணியிடை,
யாருமே அவிழ்க்காத புதிரிடை,
‘யாவர் மூலமோ’ தேறா நனவிடை,
ஓர் தனிமையில் உற்ற நோய் தீரணும்.
ஒழிந்ததனோடு இப்பிணி ஓடணும்.
சேர்ந்த சுற்றங்கள் தீங்கின்றி மீளணும்.
தெய்வ வேல் துணை தந்தெமைக் காக்கணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அருள் ஒன்றே 'தடுப்பு மருந்தும்'...ஓம்
உன் துணைமட்டும் எமக்கு மருத்துவம்.
நின் விழிச்சுடர் தாமெம் கவசமும்.
நின் கரவேலே துன்பம் சுடுவதும்.
அன்றும் ஆயிரம் இன்னல்கள் தீய்த்துமே
அரவணைத்த துன்மனம், நல்லையில்
நின்றெண் திக்கையும் பார்க்கும் அறுமுகம்,
நெஞ்சின் சஞ்சலம் நீக்கி உதவணும்!

31.08.2021

## அருள் பொழிந்திடு!

ஊர்வெறித்தது! உள்ளங்கள் எலாம்
உள்ளிடிந்துமே அஞ்சுகின்றது!
வேர் விழுதிலும் தொற்றிடும் பிணி
வீழ்த்த...நாள் தொறும் சா மலிந்தது!
சீரழியுமோ நாளை என்று நம்
சிந்தை வேகுது! நல்லைச் சண்முகன்
தேரிலே வெளி வீதி சுற்றலை...
சேர்ந்த சாபங்கள் என்று தீர்வது?

லட்சம் லட்சமாய் பக்தர் கூடியே
ஆர்ப்பரிக்க... நாம் அழுது பாடியே
"அட்ட திக்கிடர் தீர்த்து வையடா
அண்டிடும் பிணி யாவும் ஓட்டடா
கெட்டபேய்களைப் போடு சண்முகா
கிளம்படா" என நேர...தேரிலே
எட்டி ஏறி ஆக்ரோஷனாக வேல்
ஏவுவாய்... 'அழித்தல்' புரிகுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வீதியில் ஏங்கும் எங்களின்
மனதில்..'வாலினை ஆட்டும் மும்மல'
ஐந்துகள், எமைச் சூழும் பொய்மைகள்,
தரித்திரங்களை, வேட்டையாடி நீ
பன்னிரண்டு கண்ணால் ஒளி மழை
பாய்ச்சி 'பச்சையும் சாத்தி' வாழ்த்துவாய்!
என்ன அற்புதம் என்றுடல் உயிர்
மின்னை ஏற்றிய தாய் ஒளிருவோம்!

இம்முறை பிணி எம்மைச் சுற்றி ஊர்
எங்கும் நின்றிடும்! எண்ணிலா இடர்
தெம்புடன் எழும்! நித்த வாழ்க்கையை
செலவு தின்றிடும்! வீதி நின்றுனை
கும்பிட வழி அற்ற பாவிகள்
குமுற...தேரில் உள் வீதி சுற்றும் நீ
நம்பும் நம்குறை போக்கு....மூடிய
நாற் சுவர் தாண்டி அருள் பொழிந்திடு!

03.09.2021

## கண்டு உயிர்த்தனம்!

ஆர்ப்பரிக்கும் கடலாய் அடியவர்
அணிவகுத்திடக் கம்பீர தேரிலே
போர்முனை புகுவோனாய்ப் படைக்கலம்
புனைந்து ஆவேசம் கொண்டு அறுமுகன்
சூர் எனச்...சூழும் அன்பர் குறைகளை
தொட்டழிக்கும் தொழிலைப் புரிகுவான்.
ஊர் உலகும் இந் 'நல்லைச் சமரினை'
உய்த்து ணர்ந்து மகிழும்....சிலிர்த்திடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரில் சுற்றித் திசையின் இடர்களை
தேடி அழித்தவன் சீற்றம் அடங்கியே
ஆறி அமருவான்! பச்சையும் சாத்துவான்!
ஆரத்தி, ஊஞ்சற் பாட்டு, இசை கேட்டு
ஓர் சிரிப்புடன் ஆடித் திரும்புவான்!
உளத்தை மேலும் சாந்தி பெறச் செய்ய
வார்ப்பராம் அபிசேகத் திரவியம்
மனம் குளிருவான்! வரங்கள் பொழிகுவான்!

இன்று...ஆர்ப்பாட்டம் இல்லாத தேர் உலா!
எங்கும் இறைந்த தனிமைக் கடலில் ஓர்
மின்னலாய்ச் சிறு தேரில் உள் வீதியில்
வெகுண் டெழுந்து வேல் ரூபனாய் வந்து பின்
நின்றுமே பச்சை சாத்தி நிறைந்தனன்!
'நிலைமை' புரிந்தவன் 'நேரலை தன்னிலே'
மின்னியே எங்கள் வீடு தொறும் வந்து
வினையறுத்தனன்! கண்டு உயிர்த்தனம்!

05.09.2021

## நல்லூரடி மாலை

மந்தை வரிசையாய் வானில் முகிற்கூட்டம்.
சந்தனத்தை அனைத்தினிலும்
சாத்திற்று பொன்அந்தி.
வடக்கிருந்து தெற்காக
நகருதந்த முகில் மந்தை.
இடைக்கிடை சிலுசிலுத்து
'இருப்புரைக்கும்' மென்காற்று.
தொடராகப் பறந்து தொலைவேகும்
வெளவால்கள்.
படியத் தொடங்கிடுது மேற்கிருந்து இரவிருட்டு.
வெட்ட வெளியின் விரிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்துரைக்கும்
அட்டகாச அயலில்
அணிவகுத்து எழுந்துயர்ந்த
கோபுரங்கள்!
'அர்த்தசாமப்' பூசைக் குழலோசை.
நாலு திசைகளையும் நனைக்கும் 'திருஊஞ்சல்'.
ஓய்ந்தும் மனச்செவியில் ஓயா
மணியோசை.
பள்ளியறை சென்ற..இறை படு
'வைரவரை'
"தள்ளாமல் காத்திடப்பா"
எனத்தவித்துத் தொழுது
'கடைசித் தீபமும்' கண்டு கலைகின்றார்
கடம்பனுக்கு நிதம் வரவு காட்டும்
வழமை அன்பர்!
மூடிய வாசலின்முன் விரியும்
மணல் முகிழ்ந்த
வீதியிலே வேலன் காற்
தடம் தேடிச் சிலபேர்கள்.
ஆறுதலாய்... அலுவல்கள் முடித்துவந்து
தலைவணங்கி,
"பார்த்துக்கொள் எல்லாம் நீ"
என்று பாரம் இறக்கி,
வீதி மண் விபூதியாக்கி,
வில்வமரம் தீண்டி,
தேரடியும் சுற்றித் திரும்புகிறேன்....
சுமையின்றி!
எரிந்தும் அணைந்தும் இடைக்கிடை
எழும்சுடரில்
சொரிகிறது இன்னருளை...
சூடாறாத் தீச்சட்டி!

18.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்துக்கொள்!

பொருள்பெரிதாய்த் தேவையில்லை புண்ணியனே
நின் நீங்கா
அருளைத்தான் வேண்டி அழுதோம்
நல்லூரவனே!
வந்து தொடு
எங்கள் மனவருத்தம் தீர்; தீர்த்தம்
சந்தனமும் நீறுமள்ளித் தா;
பஞ்சாலாத்தியிலே
கொழுந்துவிடும் சுடரில்
குளிர் முகங்கள் ஆறுகாட்டு;
அழுத விழிதுடைத்து ஆனந்தம் பரவசமெம்
உள்ளே நிரப்பு; உடல் புல்லரித்துயிர்க்க
வெள்ளமெனப் பொழி அன்பு;
கூர்வேல் நுனியாலெம்
மும்மலச் சூரர்கள்
முளைக்கையிலே கிள்ளியெறி;
எம்பிறவித் தீக்குணங்கள் எழும்,
மகுடி ஊதி அடி;
பாவியரின் தேவர்களின் பழிதுடைக்க அரன்நுதலில்
மூன்றாம் விழியில் முகிழ்த்த ஒளிப்பிழம்பே
புற உலகில் மட்டுமல்ல
புகுந்து அகங்களுள்ளே
இருளை விரட்டு; எமைத் தொடரும் விதிப்பழியை
எரித்தும் பொடியாக்கு; ஈடில்லா நோன்பிருந்து
ஆறு தினமும்நின் அடியில் தவங்கிடந்து
"ஆறுதலைத் தா" என்றோம்... அணைத்துக்கொள்;
புதுப்புதுசாய்ச்
சூரர்கள் தோன்றுகிறார் தொடர்ந்து
அவர்களினைப்
பார்த்துக்கொள்;
எங்களையும் பார்த்துக்கொள் அருகிருந்து.!

08.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகை

காலத்தைக் கூட கருதி உடன் மாற்றும் நின்
வேலென்று நம்பி
விரிந்த உன் தாளடியில்
தாயவளை வைத்து 'தா மீட்டு' விரைந்தென்று
பாவில் அழுது பதறுகிறேன்!
நீ இன்னும்
மோனத் திருக்கின்றாய்!
மூச்சுதனைப் புதுக்கி...
சிறுநீரகம் இதயம் சீராக்கி...
மூளையிலே
பரவியதா தொற்றென்று பார்த்து இல்லை என்றருளி...
குறைந்துகூடும் இரத்த அழுத்தத்தைச் சீராக்கி...
காய்ச்சலுக்கும் மருந்தேற்றி...
கரைசல் உணவூட்டி...
ஏனின்னும் நினைவு எழும்பவில்லை மீண்டுமென
ஆராய்ந் திருக்கின்றார்!
ஆகும் வரை முயன்று
ஏதுதான் மீட்க வழி என்று... "காப்பவர்கள்"
போரே நடத்துகிறார்!
போராடிப் போராடி
மீள உயிர்க்க விளைகிறது அவள் ஜீவன்!
யார்க்கும் இடர் செய்யாள்,
யார்க்கும் இடைஞ்சலெண்ணாள்,
"ஏன்சிரமம் எவர்க்கும்" என்றும் தன் இயலாமை
பாராதுள் கவலை பதுக்கிவைத்தும்;
தனக்குள்ளே
ஆகக் குறைந்தஏக்கம் அடைவைத்தும்;
சிரித்தபடி
நேற்றுவரை எம்மை நிமிர்த்தியே இல்லறத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தாள்; நோயுள் கவிழ்ந்தும்
இருநாட்கள்
பேசிக்கொண்டிருந்தாளே...
நின் நீறுபூசி... “ஏதும்
யோசியா திருங்களெனச்” சொன்னேனே!
உன்வாசல்
நாள்தோறும் வந்து வந்து
நற்பதில் தா என்றேனே!
பாரைய்யா... நீ உனது
கண் திறந்து பாரைய்யா!
நீ அவளின் கைபிடித்து,
நீயுன் வாயால் அழைத்து,
நீயுன் கை வேல்கொடுத்து நிமிரவைத்து,
இராப்பகலாய்த்
‘தீவிர சிகிச்சைப் பிரிவில்’
சிரித்தபடி
காவலுக்கு நின்றாலே கண்விழிப்பாள்!
கூடாத
காலத்தை... வக்கரிக்கும் கிரகம்கோள்
கருமவினைத்
தீமையை ...
விதியின் திட்டத்தை ...
அதன் தீர்ப்பை ...
நீ நினைத்தால் மாற்றிடலாம்; நேர்கின்றேன்!
நீ அறிவாய்
யாவுமென்றும் யானறிவேன்!
யார்க்கு எதை எப்ப செய்ய
வேணுமென நீயும் விளங்கிடுவாய்
என்பதையுந்
தானறிவேன்;
‘தனயன்’ தவித்துன்
தாள் பணிகின்றேன்!



05.02.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிடம்?

முப்பத் திரு ஆண்டின் முன்பு ஓர் மாலையிலே
அப்போது 'கோட்டை அடிபாட்டு'
நாளொன்றில்
இப்போ இருக்கும்
இதே கேணி முதற்படியில்
தப்பி இருந்தேன்;
அருகில் என் தாயிருந்தாள்!
அப்பா வெளிநாட்டில்..
அன்றைய நல்லூரின்
கேணி மிகப்பழைய கேணி!
சுற்றியேதும்
வேலிகள் இல்லாது விரிந்த
அருட் கேணி! அதில்
ஓட்டாலே கூரையிட்ட உயர்ந்த சுற்று மண்டபங்கள்,
நீட்டி நிமிர்ந்து தாங்கும்
நெடிய சுண்ணக் கற்தூண்கள்,
சீமெந்துப் படிகள்,
சென்றிறங்கிக் கால் கழுவப்
போய்வரலாம் யாரும்!
போய் வருவோரைப் பார்த்து
நானிருந்தேன்....
அருகில் 'நாளையின் கவலையுடன்'
தாயிருந்தாள்...
முகத்தில் தயக்கம், பயம், பதட்டம்!
கைகளைப் பற்றினேன்...
நடுங்கிற்றவள் கைகள்!
பொய்யில்லாக் கண்ணில் புரியாப்
புதிர் ஏக்கம்!
பையன் 'பதினேழு வயதில்' எதைப் புரிவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு சொல்லிற்று
அர்த்தசாமப் பூசை மணி!

பூசைபார்த்து ஏதும் பேசாது புறப்பட்டோம்!.
ஆம் அதே இடத்தருகில் நேற்றுவரை
வாரவாரம்
ஞாயிறு சனியிலொன்றில் நானமர்ந்து
அதற்கிடையில்
ஓடிய காலஉரு மாற்றத்தை,
நேற்றுவரை
தேடிய தேட்டம், சிறப்புகளை,
வாரவாரம்
மாறிய மாற்றங்கள், வளர்ச்சி தேய்வை,
இரைமீட்டு
நல்லூரான் தந்தவைகள் யாவுமென
வான்நோக்கி
“எல்லாம் நீ பார்த்துக்கொள்”என்று
எனக்குள் சொல்லி மீள்வேன்!

இல்லை என் தாயாள் இன்று;
இனி
அதேஇடத்தில்
நாளையும் இருப்பேன்...
நல்லூரான் நலம் தருவான்!
தாயவளின் ‘வெற்றிடம்’ தனை
எவ்வாறு ஈடுசெய்வான்?

02.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி



எங்கள் இல்லத்தரசி

நல்லூரானின் நற்கருணை நிழலில்

மீளாத் துயில் கொண்ட வேளை

ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள்,

அயலவர்கள், உள்ளூரில் இருந்தும்

வெளியூரில் இருந்தும் தொலைபேசி மூலம்

அனுதாபம் தெரிவித்தோர், சகல வழிகளிலும்

உதவி புரிந்தோர், மேலும் மரணச் சடங்கு

அந்தியேட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி

அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்தித்த

அனைவருக்கும்

எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துப் பணிகிறோம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by : MathiColours Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org